பக்கங்கள்: 16 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 09 ஞாயிற்றுக்கிழமை 25.07.2021 கதிர் 262

## இது ரகசியம் அல்ல!


நாட்டின் பொருளாதார நெருக்கடி என்ற பிரச்சினையை முன்னிறுத்தி மிகப் பெரிய ‘சுத்துமாத்து’ ஒன்று அரங்கேறுவதாக எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை செய்திருக்கின்றன.

ராஜபக்ஷக்களின் கடந்த இருண்ட யுக ஆட்சியில்

பக்கம்02 »

# நெஞ்சுரம், நேர்மைமிக்க தலைமைக்கு காத்திருக்கின்றது தமிழரின் வரலாறு!

## கறுப்பு ஜூலை படுகொலை நினைவேந்தல் செய்தியில் தமிழ்த் தேசியக் கட்சியின் ஸ்ரீகாந்தா எதிர்வுகூறல்



கறுப்பு ஜூலை படுகொலை நிகழ்வுக் கோவைகளின் கொடிய நினைவுகள் கண் எதிரே நிற்கும் இந்தச் சோக நாள்களில், ஜனநாயக வழியில் தமிழ் இனத்தின் விடுதலை எழுச்சியை வழி நடத்திச் செல்லக்கூடிய நெஞ்சுரமும் நேர்மையும் கொண்ட தலைமைக்காக வரலாறு காத்திருக்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

☞ 2

## உயரும் தொற்றாளர் சாவு மேலும் 52 பேர் உயிரிழப்பு

### மொத்த மரணம் 4,054

கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் மேலும் 52 கொரோனாத் தொற்றாளர்கள் மரணமடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 52 பேரில் 26 பெண்களும், 26 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 54 ஆக எகிறியுள்ளது.

## இலங்கையில் நேற்று 1,707 பேருக்கு தொற்று

கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் நேற்றும் 1,707 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம்காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 94 ஆயிரத்து 820 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 957 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 66 ஆயிரத்து 665 ஆக அதிகரித்துள்ளது.

## இந்தியாவின் கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதி மன்னார் வளைகுடா கடற்பரப்பில் கண்காணிப்பு



(ந.லோகதயாளன்)

மன்னார் வளைகுடா கடற்பகுதி மற்றும் தீவுகளை இந்தியாவின் கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெனரல் அஜேந்திர பஹதுர் சிங் ஹெலிக்ஹொப்டர் மூலம் கண்காணித்துள்ளார்.

மன்னார் வளைகுடா வழியாக தொடர்ந்து

☞ 2

## வெடிமருந்துகள் குருநகரில் மீட்பு



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் இராணுவத்தினர் நடத்திய

☞ 2

## யாழில் 24 பேர் உட்பட வடக்கில் நேற்று 33 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 24 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 33 பேர் நேற்று கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 605 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஊடுருவ முயன்ற நால்வர் கைது!

### காரைநகர் இடைத்தங்கல் முகாமில் தடுத்துவைப்பு

(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து படகு மூலம் இலங்கைக்குள் ஊடுருவ முயன்ற நால்வர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு காரைநகர் இடைத்தங்கல் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி கடற்பரப்புக்கில் ஒரு படகில் ஊடுருவிய நால்வரே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவர் மட்டும் அல்லைப்பிட்டியைச் சேர்ந்தவர். ஏனைய மூவரும் இந்தியர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நிலவும் கொரோனாத் தொற்றுக் காலத்தில் கைது

☞ 2

NFLASH SUPER DETERGENT

தன்னிகரற்ற யாழ் உற்பத்தி

HI CLEAN

எமது நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களிற்கு தகுதியான முன் அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதிகள் தேவை.

தொடர்புகளுக்கு - 077 844 4951, 077 816 2637, 021 221 4520.

## பி.சி.ஆர். பரிசோதனை எண்ணிக்கை ராஜபக்ஷ அரசால் திட்டமிட்டு குறைப்பு

### சமன் ரத்னப்பிரிய குற்றச்சாட்டு



நாட்டில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை ராஜபக்ஷ அரசு திட்டமிட்டு குறைத்துள்ளது.

– இவ்வாறு தேசிய தொழிற்சங்க முன்னணியின் தலைவர் சமன் ரத்னப்பிரிய குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த

☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெருமளவு 'கொமிஷன்கள்' வெளிநாட்டில், வெளியே தெரியாத கணக்குகளில் முதலிடப்பட்டன என்று கூறப்பட்டது தெரிந்ததே. அவற்றை மோந்து தேடிக் கண்டு பிடிக்க நல்லாட்சி அரசில் முயற்சிகள் எடுக்கப்பட்டனவாயினும் அவை பெரும்பாலும் வெற்றியளிக்கவில்லை.

எது, எப்படி என்றாலும் அத்துணை பெரிய தொகை பணத்தை மீண்டும் நாட்டுக்குள் கொண்டு வந்தால் சட்டம் தன் கடமையைச் செய்யும், பணம் சிக்கும் என்றெல்லாம் பலரும் நம்பினர்.

கறுப்புப் பணமாக வெளியே – வெளிநாடுகளில் – பதுக்கப்பட்ட அந்தப்பணத்தை சாவகாசமாக நாட்டுக்குள் எந்தக் கேட்டுக் கேள்வியுமின்றி வெள்ளைப் பணமாகக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான வாசலை இப்போது கனகச்சிதமாகத் திறந்து விட்டிருக்கின்றார் புதிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

நாட்டின் பொருளாதார நிலைமை மோசம். அந்நிய செலாவணிக் கையிருப்பு அடியோடு கரைந்து போய்விட்டது. இறக்குமதியை மேற்கொள்ள நிதியில்லை.

வெளிநாட்டில் இருக்கும் நம்மவர்களின் பணத்தை வெளிநாட்டு முதலீடுகளாக நாட்டுக்குள் தருவித்தால்தான் நாடு நிமிரலாம் என்கின்றார் புதிய நிதியமைச்சர்.

அதற்கு ஒரே வழி வெளிநாட்டில் நம்மவர்கள் வைத்திருக்கும் எவ்வளவு பணத்தையும் நாட்டுக்குள் கொண்டு வர அனுமதிப்பதுதானாம். எவ்வளவு பணமும் கொண்டு வரலாம்.

எந்தக் கேள்வியும் இருக்காது. எப்படி உழைத்தீர்கள், வருமான வரி கட்டினீர்களா என்ற கேள்வி எதுவும் இருக்காது. வெளியில் வைத்திருக்கும் கறுப்புப் பணத்தை எந்தக் காரணமும் காட்டாமல் – எந்தத் தடையும் இல்லாமல் – நாட்டுக்குள் வெள்ளைப் பணமாக மாற்றுவதற்கு எந்தத் தடையும் இல்லாமல் வழி திறந்து விடப்பட்டிருக்கின்றது.

பிறகென்ன? பல்லாயிரம் கோடிகளில் கொமிஷன்களில் சம்பாதித்து வெளிநாடுகளில் – வெளியில் தெரியாமல் – முடக்கி வந்திருந்த பணத்தை, நாட்டுக்குள் கொண்டு வந்து வெள்ளைப் பணமாகச் செலவழிப்பதற்கு சட்ட ரீதியான வழி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

கறுப்புப் பணக் கோடீஸ்வர்கள் எல்லாம் வெள்ளைப்பணம் புரளும் கோடீஸ்வரர்களாகி விடுவர்.

வெளிநாடுகளில் தங்கள் பெயரை மறைத்து, இரகசியக் கணக்குகளிலோ அல்லது பினாமிகளின் பெயர்களிலோ முடக்கப்பட்டிருந்த பணத்தை சொந்தப் பெயரில், சொந்தக் கணக்கில் நாட்டில் வரவு வைத்து செலவழிக்க வேண்டியதுதான். யாரும் கணக்குக் கேட்கவும் மாட்டார்கள், கூறவும் தேவையுமில்லை. யாருக்கும் அந்த உழைப்புக்கான வருமானவரி கட்டவும் தேவையில்லை. காட்டவும் தேவையில்லை.

கொள்ளையடித்து வெளிநாடுளில் பதுக்கிய பணம் என்றால் கூட அதைத் தாராளமாக இம்முறையினால் நாட்டுக்குள் கொண்டு வந்து பயன்படுத்த எந்தத் தடையும் இல்லை.

ஆளும் தரப்பினர் தங்களிடம் உள்ள கறுப்புப் பணத்தை நாட்டுக்குள் வெள்ளையாகக் கொண்டு வந்து பயன்படுத்த வியூகம் அமைக்கும் தந்திரமே இது என்று சீறுகின்றன எதிர்க்கட்சிகள்.

இப்படி பணச் சலவை செய்ய வசதியளிக்கும் – கறுப்புப் பணத்தை எந்த வித தடுப்புமின்றி வெள்ளைப் பணமாக்க வழி செய்யும் – புதிய சட்ட மூலம் ஒன்றை கடந்த 20ஆம் திகதி மொட்டுக் கட்சி அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இந்தச் சட்ட மூலத்துக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அதன் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் இரான் விக்கிரமரட்ணவும், ஜே.வி.பி. சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெட்டியும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

நாளை மேலும் இரண்டொரு மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கலாகவுள்ளன. அவற்றில் ஒன்று மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தாக்கல் செய்யும் மனுவாகும். அதன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் உயர் நீதிமன்ற வழக்கு விசாரணையில் முன்னிலையாகி வாதிடுவார் எனத் தெரிகின்றது.

கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகராவும் ஆளும் தரப்பின் இந்த முயற்சிகளைக் கடுமையாக எதிர்த்திருக்கின்றார்.

நாடு சுதந்திரம் அடைந்த காலம் முதல் நிதி அமைச்சர் என்.எம்.பெரேரா உட்பட பலர் இத்தகைய முயற்சியில் இறங்கியிருக்கின்றனர். ஆறு தடவைகள் இத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் பலன் கிட்டவில்லை என்று அவர் கூறுகின்றார்.

ஆனால், முந்திய ஆறு தடவைகளும், உண்மையில் வெளிநாட்டில் உள்ள பணத்தைக் கொண்டு வந்தாவது நாட்டின் பொருளாதாரத்தை சீர் செய்து விட முடியாதா என்ற ஆதங்கத்தில் முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் இம்முறை வெளியில் பெருவாரியாக முடக்கி வைத்திருப்பவர்கள் அதனை தங்கள் ஆள்கள் கொண்டு வருவதற்காக சட்டத் தடைகளை நீக்கி வழி திறந்து விடுகின்றார்கள்.

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட உள்கட்டமைப்புத் திட்டங்கள், அதிக வேக நெடுஞ்சாலைகள், பாரிய அபிவிருத்தித் திட்டங்களின் பெயரில் கொமிஷனாக அறவிடப்பட்டு வெளியில் பதுக்கப்பட்ட பணம் வந்து சேர்ந்தாலாவது நாட்டின் பொருளாதாரம் உருப்பட்டால் சரிதான்.

திருடனைத் தலையாரியாக்கினால் திருட்டுப் பணமும் சட்ட ரீதியானதாகி விடுவது தவிர்க்க முடியாததுதான்...!

– மின்னல் –

## நெஞ்சுரம், நேர்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கறுப்பு ஜூலை படுகொலை நினைவேந்தல் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

38 வருடங்களுக்கு முன்னர், 1983 ஜூலை 23ஆம் திகதி நள்ளிரவில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இராணுவ வாகன அணி ஒன்றின் மீது நிகழ்த்தப்பட்டு 13 சிப்பாய்கள் பலியான குண்டுத் தாக்குதலுக்கு, எதிர் நடவடிக்கையாக, அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவும், அவரின் அரசும் தமிழ் மக்கள் மீது தொடுத்த, பிரகடனப்படுத்தப்படாத போரின் தொடர் விளைவுகள் மற்றும் எதிர்விளைவுகளின் தாக்கங்களில் இருந்து இலங்கைத் தீவு இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

குண்டுத் தாக்குதல் நிகழ்ந்து 24 மணித்தியாலயங்களுக்குள் தொடுக்கப்பட்டு, அடுத்து வந்த 24 மணித்தியாலயங்களுக்குள் 35 தமிழ் அரசியல் கைதிகளையும், தொடர்ந்து மேலும் 48 மணித்தியாலயங்களுக்குள் 18 தமிழ் அரசியல் கைதிகளையும் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் கோரமாக நரபலி கொண்ட அரச பயங்கரவாதம், அந்த நாள்களில் இருந்து இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களின் நினைவுகளை விட்டு நீங்க மறுத்து நிற்கின்றது.

அந்த இருண்ட நாள்களில், தலைநகர் கொழும்பிலும், மற்றம் தென் இலங்கையிலும், மத்திய மலைநாட்டிலும் உயிர்கள் பறிக்கப்பட்டும் இன்னும் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டும் தமிழ் மக்கள் சந்தித்த அநாதரவான நிலைமையின் நிழல்கள் இப்போதும் நீடித்து நிற்கின்றன.

1958, மற்றும் 1977 என சுமார் 20 ஆண்டு கால இடைவெளியில், இரண்டு வெவ்வேறு பேரினவாத அரசியல் அணிகளின் ஆட்சிக் காலங்களில், அரங்கேற்றப்பட்ட அக்கிரமங்கள் எல்லாம், 1983இன் பின்னர் சிறிய நிகழ்வுகளாகிப் போயின என்பதுதான் வரலாறு.

இந்தச் சோக வரலாற்றில், அரச பயங்கரவாதத்தில் இருந்து தப்பி வந்த தமிழ் மக்களுக்கு தஞ்சம் தத்திருந்த எமது தாயக வாழ்விடம், தொடர்ந்து சட்டவிரோத பேரினக் குடியேற்றங்களால் ஊடுருவப்பட்டு, துண்டாடப்படும் ஆபத்தை சந்தித்துக் கொண்டிருக்கின்றது.

1983இல் தமிழ் மக்கள் மீது போர் தொடுக்கப்பட்ட போது பிறந்திராதவர்களும், சிறுபிள்ளைகளாக ஓடித் திரிந்தவர்களும் இலங்கைத் தீவின் இன நெருக்கடிக்கு தமிழர் தரப்பிலிருந்து தீர்வு ஒன்றைக் கொண்டு வர முடியுமா என்ற சிந்தனையின் முனைப்பில் தமக்கு தெரிந்த வழிகளில் இன்று பிரிந்து நின்று செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் தமக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட முன்னரே, 1983 ஆடி மாதம் 25ஆம் திகதி பிற்பகல் வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெரும் சுவர்களுக்கு உள்ளே சித்திரவதை செய்யப்பட்டு சிதைத்துக் கொலை செய்யப்பட்ட மாவீரர்கள் குட்டிமணியும், ஜெகனும் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த தலைவன் தங்கத்துரையும் மற்றும் அவர்களைப் போன்ற 50 தமிழ் அரசியல் கைதிகளும், இரு தொகுதியினராக, ஒரு நாள் இடைவெளியில் மனித விலங்குகளின் பிடியில் சந்தித்த அந்தக் கடைசி விநாடிகள் உணர்வுள்ள தமிழர்களின் நெஞ்சங்களில் இப்போது நினைத்தாலும் கொழுந்துவிட்டெரியும் நெருப்பாக சாகாவரம் பெற்று நிற்கின்றன.

இந்த நிகழ்வுக் கோவைகளின் கொடிய நினைவுகள் கண் எதிரே நிற்கும் இந்த சோக நாள்களில், ஜனநாயக வழியில் தமிழ் இனத்தின் விடுதலை எழுச்சியை வழி நடத்திச் செல்லக்கூடிய நெஞ்சுரமும் நேர்மையும் கொண்ட தலைமைக்காக வரலாறு காத்திருக்கின்றது – என்றுள்ளது.

## இந்தியாவின் கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடத்தல்களும் சட்டவிரோத நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்துக்கு அருகே இலங்கை இருப்பதால், தெற்கு கடற்கரையான மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இருந்து கடல் அட்டைகள், மஞ்சள், கடல் பல்லி, கடல் குதிரை, கஞ்சா உள்ளிட்ட பொருட்கள் தமிழகத்தில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்டு வருகின்றன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளயிட்டிருந்தன.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக உரிய ஆவணங்கள் இன்றி சந்தேகநபர்கள் கடல் வழியாக தமிழகத்துக்குள் பிரவேசிக்கின்றமையும் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, மன்னார் வளைகுடா பகுதியை கண்காணிக்க இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு அதிநவீன ரோந்து கப்பல்கள் பாதுகாப்புப் பணிக்காக பாம்பன் குந்துகால் மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை இராமேஸ்வரம் சென்ற இந்தியக் கடற்படை வைஸ் அட்மிரல் ஜெனரல் அஜேந்திர பஹதுர் சிங் இராமேஸ்வரம் கோவிலில் தரிசனத்தை முடித்துவிட்டு, பாம்பன் அடுத்துள்ள குந்துகால் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் கடற்படைக்கு சொந்தமான அதிநவீன ரோந்து கப்பல்களைப் பார்வையிட்டுள்ளார்.

பின்னர் அங்கிருந்து ஹெலிக்ஹொப்டர் மூலம் மன்னார் வளைகுடா பகுதியிலும் தீவுகளிலும் தாழ்வாகப் பறந்து கடல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

## வெடிமருந்துகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுற்றிவளைப்புத் தேடுதலின்போது ஒரு தொகுதி வெடி மருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

குருநகர் பகுதியில் சட்டவிரோதமாக வெடிபொருட்கள் கையாளப்படுகின்றன என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இராணுவத்தினர் நேற்று திடீர் சுற்றிவளைப்பு தேடுதலை நடத்தியிருந்தனர். இதன்போது ரி.என்.ரி. வெடி மருந்து மற்றும் 4 டெடனேட்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை இராணுவத்தினரும் பொலிஸாரும் முன்னெடுத்துள்ளனர்.

## பி.சி.ஆர். பரிசோதனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகள் 50 வீதமாகக் குறைவடைந்துள்ளன.

பி.சி.ஆர். பரிசோதனைகள் குறைவடைந்ததால், பதிவாகும் நாளாந்த நோயாளர்களின் எண்ணிக்கை மூவாயிரத்திலிருந்து குறைவடைந்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் நாளாந்தம் 23 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது 12 ஆயிரம் பரிசோதனைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

அதனால்தான் தற்போது நாளாந்தத் தொற்றாளர்கள் 1,500 அல்லது 1,700 ஆக அடையாளம் காணப்படுகின்றனர். எனினும், சமூகத்தில் நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் அதிகளவில் இருக்க முடியும் – என்றார்

## இந்தியாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)






செய்யப்பட்ட இந்தியர்கள் உடனடியாகவே கடலில் வைத்தே திருப்பப்படும் நிலையில் இந்த மூவரும் பல தடவை யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புக்கு வந்து சென்றமையால் சந்தேகத்தின் அடிப்படையில் மேலதிக விசாரணையின் நிமித்தமே இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள நால்வரும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர்.

# ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 622 பேர் வெள்ளிக்கிழமை தடுப்பூசி பெற்றனர்

இலங்கையில் வெள்ளிக்கிழமை மாத்திரம் ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 622 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் 40 ஆயிரத்து 110 பேருக்கு செலுத்தப்பட்டதாகவும் இரண்டாவது டோஸ் 10 ஆயிரத்து 83 பேருக்கு செலுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பைஸர் தடுப்பூசியின் முதல் டோஸ் 13 ஆயிரத்து 308 பேருக்கும் மொடர்னா தடுப்பூசியின் முதல் டோஸ் 97 ஆயிரத்து 121 பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளன.

இதனை அடுத்து நாட்டில் இதுவரை 66 லட்சத்து 93 ஆயிரத்து 72 பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசியும் 17 லட்சத்து 46 ஆயிரத்து 397 பேருக்கு முழுமையாகவும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

# பயிர்ச்செய்கையில் நோய் தாக்கம் கிளிநொச்சி விவசாயிகள் பாதிப்பு

சிறுபோக பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான நோய் தாக்கத்தால் கிளிநொச்சி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாய செய்கை பண்ணப்பட்டு உள்ள பயிர்கள் இரண்டு மாதம் கடந்துள்ள நிலையில் பங்கஸ் நோய் மற்றும் பூச்சிகளின் நோய்த் தாக்கம் ஆகியவற்றின் காரணமாக பல விவசாயிகளின் பயிர்கள் அழிந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த பயிர்ச்செய்கையை, எம்மிடமிருந்த நகைகளை அடகு வைத்தும் அதிக வட்டிக்கு பணம் பெற்றும் மேற்கொண்டுள்ள நிலையில் இயற்கையும் எம்மை கைவிட்டு விட்டது என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் இதற்கு முற்பட்ட காலங்களில் பெற்ற கிருமிநாசினிகள், தற்போது பல மடங்கு அதிக விலை கொடுத்து பெற வேண்டி உள்ளதுடன் விவசாயத்துக்கான உரங்கள் பல ஆயிரம் ரூபா அதிகமாக கொடுத்து, பயிர்ச்செய்கை மேற்கொண்டு வருகிறோம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் தற்போது பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கம் காரணமாக சிறுபோக அறுவடையில் எதிர்பார்த்த விளைச்சலில் பாரிய சரிவை ஏற்படுத்தக்கூடும் என்பதை உரிய அதிகாரிகளுக்கு பலமுறை தெரிவித்துள்ள போதிலும் எமக்கு எந்தவிதமான நட்டஈடும் இதுவரை கிடைக்கவில்லை என விவசாயிகள் கூறியுள்ளனர்.

ஆகவே இம்முறையாவது எமக்கு ஏதேனும் ஒரு வகையில் நட்டஈட்டைப் பெற்றுத்தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







# சினோபோர்ம் தடுப்பூசி கல்முனையில் ஏற்றல்

கல்முனை பிராந்தியத்தில் சினோபோர்ம் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு நேற்று (சனிக்கிழமை) காலை முதல் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணனின் வழிகாட்டலுக்கமைய 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில், தடுப்பூசிகள் செலுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாடு தொடர்பாக சுகாதார பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

சினோபாம் மிகச் சிறப்பாக தொழிற்படும் தடுப்பூசியாக இலங்கையில் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே கொரோனாவில் இருந்து ஒவ்வொருவரும் தங்களை பாதுகாத்துகொள்ளும் பொருட்டு இந்த தடுப்பூசியை செலுத்திக்கொள்வது நல்லது.

மேலும் வீடுகளில் இருந்து தடுப்பூசி ஏற்றுகின்ற மையங்களுக்கு வருகை தர முடியாதவர்களுக்கு தடுப்பூசித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில், நடமாடும் சேவையின் ஊடாக ஏற்றுவதற்கு தயாராகவுள்ளோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியலுக்கு வருகிறார் சந்திரிகாவின் புதல்வர்?

## திட்டத்தை வகுக்கிறார் மங்கள



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வரான விமுக்தி குமாரதுங்க மிக விரைவில் இலங்கை அரசியலில் இறங்க உள்ளார் எனத் தெரிய வருகிறது.

இந்த செய்தி வெளியாகிய பின்னர், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு மிக நெருக்கமான அரசியல் சகாவான மங்கள சமரவீர, கொள்கை ரீதியான அரசியல் வேலைத்திட்டம் தொடர்பாக சமூகத்திற்கு தெளிவுப்படுத்த உள்ளார்.

உண்மையான தேசப்பற்றாளர்கள் என கொள்கை திட்டத்தை அவர் இன்று நாட்டுக்கு அறிமுகப்படுத்தவுள்ளார்.

எதிர்காலத்தில் நாட்டை பொறுப்பேற்க உள்ள இளம் சமூகத்தை கொள்கை ரீதியாக ஒன்றிணைக்கும் வகையில், இளைஞர், யுவதிகள் தலைமையில் இந்த உண்மையான தேசப்பற்றாளர்கள் கொள்கை திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

உண்மையான தேசப்பற்றாளர்கள் கொள்கை திட்டத்தின் ஊடாக வீழ்ச்சியடைந்து வரும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப நடுநிலையான கொள்கையை சமூகமயப்படுத்துவதே மங்கள சமரவீரவின் இலக்காக இருந்து வருகிறது.

விமுக்தி குமாரதுங்கவின் அரசியல் வருகையை தயார்ப்படுத்தும் வகையில் மங்கள இந்த கொள்கைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவும் நாம் இலங்கையர் என்ற கட்சியை ஆரம்பித்ததும் இந்தத் திட்டத்துக்காக எனவும் பேசப்பட்டு வருகிறது.

கடந்த பொதுத் தேர்தல் போட்டியில் இருந்து விலகிக்கொண்ட மங்கள சமரவீர, இரண்டு ஆண்டுகளாக அமைதியாக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் இனப் படுகொலை (1983),
வெலிக்கடைச் சிறைப் படுகொலையின்
38ஆவது வருட நினைவு நாள்
(ஜீலை 25, ஜீலை 27)
தமிழ்த் தேசிய வீரர்கள் நாள் - ஜீலை 25



தலைவர் - தங்கத்துரை | தளபதி - குட்டிமணி | முன்னணிப் போராளி - ஜெகன்

இலங்கைத் தீவு பூராகவும் 1983ஆம் ஆண்டு ஜீலை மாதம் படுகொலை செய்யப்பட்ட மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களுக்கும், கொழும்பு வெலிக் கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளி ஜெகன், டாக்டர் இராஜசுந்தரம், நடேசுதாசன், தேவன், சிவபாதம், சிறீகுமார், குமார், மரியாம்பிள்ளை, குமார்குலசிங்கம் உட்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளையும், இதுவரை இனப்படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களையும், தமிழ் இனவிடுதலைப் போராட்டத்தில் தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்த 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களையும் வீர மறவர்களையும் தமிழ்த் தேசிய வீரர்கள் நாளில் (ஜீலை 25) நினைவு கூர்ந்து வீரவணக்கத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கட்சி

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கறுப்பு ஜூலை நினைவு

கறுப்பு ஜூலை கொடூரத்தில் நினைவழியா நினைவு நாள் இது.

பௌத்த, சிங்களப் பேரினவாத கொடூரத்தின் கோரத்தாண்டவமாக – ஊழிக்கூத்தாக – அரங்கேறிய இனக்கலவரத்தின் குரூரத்தை தாங்க முடியாது ஈழத் தமிழினம் துவண்டு போன வரலாற்றுப் பதிவுகள் இடம்பெற்ற வாரத்தை நாம் கடக்கின்றோம்.

இலங்கைத் தீவின் வடக்கிலும் கிழக்கிலும் – தங்களின் பாரம்பரிய தாயகத்தில் – சுதந்திரமாக வாழும் உரிமையைக் கேட்டு தமிழர்கள் மன்றாடியமைக்காக மட்டுமே அவர்களின் மீது சிங்கள, பௌத்த பேரினவாதம் இன அழிப்பு என்ற கொடூரத்தை ஏவி விட்டதன் 38 ஆவது ஆண்டு நிறைவை இப்போது நாம் மனதில் கொள்கிறோம்.

1983 ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி முன்னிரவு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் 13 இராணுவத்தினரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. ஆயுதப் போராளிகளின் அந்த தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத இலங்கை அரசுப் படைகள் தாக்குதலுக்கான பழிவாங்கும் சீற்றத்தை அடுத்த நாள் யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலும், கந்தர்மடத்தில் அப்பாவித் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டனர். சுமார் அறுபது அப்பாவிப் பொதுமக்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டார்கள்.

அதைத் தொடர்ந்து கொழும்பிலும் இலங்கையின் பிற பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் அலையலையாகக் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இது கண்மூடித்தனமாக நடந்த அல்லது திடீரென வெடித்த கலவரம் அல்ல. 13 இராணுவத்தினரின் படுகொலைக்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக உணர்ச்சிப் பெருக்கில் முன்னெடுக்கப்பட்ட வன்முறையும் அல்ல. கலவரத்தை முன்னெடுத்தவை தறிகெட்டு, எல்லை மீறி, வன்முறை புரிந்த கும்பல்களும் அல்ல. இவை எல்லாவற்றையும் தாண்டி, கலவரம் என்ற பெயரில் நன்கு திட்டமிடப்பட்டு, நெறிப்படுத்தப்பட்ட கட்டவிழ்த்து விடப்பட்ட ஒழுங்கு முறையான கொடூர வன்முறையே இது என அவதானிகள் நோக்குகின்றனர்.

பாதுகாப்பு ஏதுமற்ற நிலையில் அப்பாவிகளாக இருந்த சுமார் மூன்று அல்லது நான்கு ஆயிரம் தமிழர்கள் இலக்கு வைக்கப்பட்டு, குரூரமாக, காட்டுமிராண்டித்தனமாக, மிருகத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்கள். பல தமிழர்கள் சிங்களக் காடையர்கள் கும்பலினால் கண்டம் துண்டமாக வெட்டிச் சாய்க்கப்பட்டனர். பல தமிழ்க் குடும்பங்கள் உயிரோடும், அவற்றின் உடைமைகள், சொத்துக்களோடும் சேர்ந்து எரிக்கப்பட்டன. பல்லாயிரம் தமிழர்களின் வீடுகள், கடைகள், வர்த்தக நிலையங்கள், சினிமாக் கொட்டகைகள், வியாபார ஸ்தாபனங்கள், எரிபொருள் நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

இந்த ஜூலை கலவரம் அரங்கேறிய சமயத்தில் ஈழத்தமிழர்களின் தேசிய ஆன்மாவில் மற்றொரு கறை படிந்த வரலாற்றுக் குரூரமும் அரங்கேறியது. 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதியன்றும் அதற்கு இரண்டு நாள்கள் கழித்தும் சிறைக் கலவரம் என்ற பெயரில் சிங்களக் காடையர்களால் கொழும்பு வெலிக்கடைச் சிறைக்குள் வைத்து தமிழ் அரசியல் கைதிகள் – விடுதலைப் போராளிகள் – குரூரமான முறையில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். சிறை அதிகாரிகளுடனும் சிறைக்காவலர்களுடனும் கூட்டு சேர்ந்த சிங்களக் கைதிகள் சிறைக் கூண்டுகளை தாக்கி அழித்து உள்ளே நுழைந்து தமிழ் கைதிகளைக் கண்டம் துண்டமாக வெட்டிச் சாய்த்தமையோடு கண்களைக் கொடூரமாகக் குத்திப் பிடுங்கிக் குதறிக் கோரமாகக் கொன்றொழித்தனர். தமிழர்களின் ஆயுத விடுதலைப் போராட்டத்தில் ரெலோ அமைப்பின் பிதாமகர்கள் என்று போற்றப்படும் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்றோர், காந்தீய அமைப்பை இலங்கையில் ஸ்தாபித்த கலாநிதி ராஜசுந்தரம் உட்பட 54 கைதிகள் இவ்வாறு பிய்த்துதறப்பட்டு, கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

காருண்ய மகான் புத்தரின் புண்ணிய பூமியில் மனிதத்துவமற்ற, மிருகத்தனமான கொடுமைகள் சர்வ சாதாரணமாக அரங்கேறின என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தி நிற்கும் வாரம் இது. இந்தக் கலவரப் பேரழிவானது மடை வாயை உடைத்த பெருவெள்ளம் போல தமிழ்த் தேசிய உணர்வை எங்கும் பிரவாகம் எடுக்கச் செய்தது. நாடுகள், கண்டங்கள், எல்லைகள் கடந்து இனவுணர்வு ஈழத் தமிழர்கள் அனைவரையும் பற்றிப் பிடிக்க இந்த கலவரக் கொடூரமே காரணமாயிற்று. தமிழர்களுக்கு இந்தக் கலவரம் மூலம் இழைக்கப்பட்ட கொடூரங்கள் ஆயுதம் தரித்த விடுதலைப் போரில் இணைந்து கொள்ள பல்லாயிரக் கணக்கான இளம் தமிழர்களை தூண்டியது என்பதும் மறக்கக் கூடியதல்ல. இலங்கை விடயத்தில் இந்திய அரசு தலையீடு செய்வதற்கான இடைவெளியையும் பொருத்தமான புறநிலையையும் தகுந்த நிலைப்பாட்டையும் கூட உருவாக்கிக் கொடுத்தது இந்தக் கலவரம்தான். ஒட்டுமொத்தத்தில் இலங்கை அரசு இந்தக் கலவரத்தை தூண்டி, அதன் மூலம் தமிழர்களை அழிக்க முயன்று தன் தலையில் தானே மண் வாரி போட்டுக் கொண்டது என்பதுதான் உண்மையாகும்.

## ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுப்பு



யாழ்ப்பாணத்தில் டயகம சிறுமியான ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டமொன்று நேற்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு மத்திய பஸ் நிலையம் முன்பாக ஆரம்பமான இந்தப் போராட்டம், பேரணியாக புதிதாக கட்டப்பட்டுள்ள பஸ் நிலையம் வரை சென்று நிறைவடைந்துள்ளது.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் டயகம 3 ஆம் பிரிவில் இருந்து 15 வயது சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

அதன்பின்னர் கடந்த 3ஆம் திகதி தீக்காயங்களுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 15ஆம் திகதி சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்திருந்தார்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த சிறுமி நீண்டகாலமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

மேலும் சிறுமியின் மரணம் தொடர்பில் பொலிஸார் பல்வேறு கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையிலேயே இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷக்களினால் மட்டுமே தமிழர்களுக்கு தீர்வை தர முடியும்

### ஆனந்தசங்கரி இடித்துரைப்பு

தற்போதைய ராஜபக்ஷக்கள் அரசால் மட்டுமே தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும். நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் என முக்கிய பொறுப்புக்களில் சகோதரர்களே உள்ளனர். மற்றும் ஏனைய முக்கிய பொறுப்புக்களிலும் இவர்களது குடும்ப உறுப்பினர்கள் உள்ளார்கள். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தவர்களும் இவர்கள்தான். அதற்கான பொறுப்புக்கூறலையும் நிச்சயம் இவர்கள் ஏற்றாகவேண்டும். அதற்குரிய பிராயச்சித்தமாக இந்திய முறையிலான ஒரு தீர்வையாவது இவர்கள் தமிழ் மக்களுக்கு முன் வைக்கவேண்டும். அது இவர்களால் மட்டும் தான் முடியும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

எமது நாட்டில் மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறிய அரசுகளால் ஏற்பட்டவிரக்தி காரணமாகவே தமிழர் தரப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஒன்றிணைந்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேசம் அறியச் செய்தது என்பது எவராலும் மறக்கவோ மறைக்கவோ முடியாத ஒரு வரலாற்று உண்மையாகும். இதன் விளைவால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இருந்தும் ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் பல குழுக்களாக பிரிந்து நான் பெரிதா? நீ பெரிதா? என்று தங்களுக்குள் மோதிக்கொண்டனர். அதன் விளைவாக முள்ளிவாய்க்கால் வரை சென்று பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களும் பலியாகின. பல கோடி பெறுமதியான சொத்துக்களும் அழிந்தன.

இந்த அழிவிற்கு யுத்தம் நடத்திய இரு தரப்பினரும் பொறுப்பேற்பதுதான் தார்மீகக் கடமை என்றாலும், ஆட்சியாளர்கள் தமிழர் தரப்பு நியாயங்களை ஏற்றுக்கொள்ளாமல் நடந்த அனர்த்தங்கள் தான் இவை என்பதை சர்வதேசம் நன்கு அறியும்.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தை நடத்தி முடித்த இன்றைய அரசு 2015 வரை ஆட்சியில் இருந்தது. அந்த நேரத்தில் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி தமிழ் மக்களின் மனதில் இடம்பிடித்திருக்க வேண்டும். அதை அன்றைய அரசு செய்யத் தவறிவிட்டது.

அதன்பிறகு 2015 ஆம் ஆண்டு சிறுபான்மை மக்களின் பேராதரவுடன் ஆட்சியைக்கைப்பற்றி 2020 வரை தேசிய அரசு என்ற போர்வையில் நடந்த நல்லாட்சியிலும் தமிழர் தரப்பின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அந்த அரசின் பிரதான எதிர்கட்சியாக இருந்து ஒவ்வொரு (பட்ஜெட்) வரவு - செலவு திட்டத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு தெரிவித்தும், அந்த நல்லாட்சியும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவில்லை.

மீண்டும் யுத்தம் நடத்திய தரப்பு ஆட்சிப் பீடம் ஏறியுள்ளது. அதுவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தைச் சார்ந்த அங்கத்தவர்கள் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் மற்றும் மிக பல முக்கிய பொறுப்புக்களிலும் உள்ளார்கள். அவர்கள் நினைத்தால் ஒரே இரவில் ஒரே மேசையில் இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் காணலாம். ஏனையவர்களை விட இவர்களுக்கே அதிக பொறுப்பு உண்டு. ஏனெனில் யுத்தத்தை நடத்தியவர்கள் இவர்களே. ஒரு நாட்டில் தனது குடிமக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்தும். யுத்த நேரத்தில் அதனை செய்ய தவறிவிட்டது எனப் பலராலும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், யுத்தத்தில் நடந்த அனர்த்தங்களுக்கு பொறுப்பேற்று அதற்கு பரிகாரமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்த அரசு தீர்த்து வைக்க வேண்டும்.

சமீபத்தில் அரசியல் கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டார்கள். அதே போல் எஞ்சியுள்ளவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நான் அன்று தொட்டு இன்று வரை வலியுறுத்தி வரும் இந்திய முறையிலான ஓர் அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும். மிகவும் பலத்துடன் மிக முக்கியமான பொறுப்புக்களில் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இருப்பதால் மிகவும் இலகுவாக சிறுபான்மை மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான ஒரு தீர்வைக் காணலாம். இது போன்ற ஒரு சந்தர்ப்பம் இனி எந்த அரசுக்கும் அமையாது. எனவே, இந்த அரசாங்கத்தை விட்டால் வேறு எந்த அரசாலும் எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியாது. எனவே, இதனை இன்றைய அரசு நன்கு புரிந்து கொண்டு, தட்டிக்கழிக்காமல் ஏனையவர்கள் மீது பழியைப் போடாது செயலாற்ற வேண்டிய தருணம் இதுவே.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த பின் இதுவரை நடந்த அனைத்துத் தேர்தல்களிலும், தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையே பெருமளவு ஆதரித்தார்கள். இருந்தும் அவர்கள் ஆட்சியாளர்களுக்கு இடித்துரைக்காது வெறுமனே தங்களது சுயநலத்திற்காக செயற்பட்டதன் விளைவே, இன்றைய தமிழ் மக்களின் அவல நிலைக்கு காரணம் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்த தமிழ்த் தரப்புகளும் சரி எதிராக இருந்த தமிழ்த் தரப்புகளும் சரி தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் சுயநலமாக செயற்பட்டு தமிழ் மக்களுக்கு மாபெரும் வரலாற்றுத் தவறை செய்துள்ளார்கள். தமிழ் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது. - என்றுள்ளது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 24



ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப்படம் எம்.ஜி.ஆருடன் மேடையில் சொல்லின் செல்வர் இராஜதுரை அமர்ந்திருக்கின்றார். இந்தப் படத்தைப் பிடித்தவர் எஸ்.டி.சிவநாயகம் ஐயாதான்.

இன்றைய நிலையில் 'இலங்கை' என்ற பெயரைச் சொன்னதும் தமிழக மக்களுக்கு பெரிதும் நினைவுக்கு வருபவர் இலங்கை ஜெயராஜ்.

இலக்கியத்திலும் – குறிப்பாக வள்ளுவம், கம்பராமாயணம் போன்றவற்றிலும் – மற்றும் சைவ சித்தாந்தத்திலும் ஆளுமையான பேச்சாளராக மதிக்கப்படும் அறிஞர் கம்பவாரிதி ஜெயராஜ் பாடசாலைக் காலத்தில் இருந்தே எனது நெருங்கிய நண்பர். ஒரே காலத்தில் ஒரே கல்லூரியில் கல்வி கற்றோம். ஆடியும் பாடியும் பேசியும் திரிந்தோம். பள்ளிக்கூட நாள்களில் விளையாட்டு மைதானப் பக்கமே ஒதுங்காத நண்பன் ஜெயராஜ், நான் விளையாடும் ஆட்டங்களைக் காண்பதற்காக மட்டும் மைதானங்களில் பிரசன்னமாவார். பின்னாள்களில் அவரின் பேச்சுக்கு முதல் விசிறி நான். பாடசாலை நாள்களில் என் விளையாட்டுக்கு அவர் ரசிகர்.

நாங்கள் மட்டுமல்லர், எங்கள் குடும்பங்களும் உணர்வால் ஒன்று இணைந்தவர்கள். என் பெற்றோருக்கு ஜெயராஜும் ஒரு பிள்ளைதான். கம்பன் கழகமும் எங்கள் குடும்பம்தான். ஜெயராஜுடனான உறவுப் பிணைப்பு குறித்து நான் எழுதுவதானால் அது தனி புத்தகமாகும். என் உயர்விலும் தனித்துவத்திலும் அவரது ஆளுமை என்னை அறியாமலேயே செல்வாக்கு செலுத்தியது என்பது மட்டும் உண்மை.

நானும் எனது சகோதரர்களும் அவரின் கம்பன் கழகத்துடன் வளர்ந்தோம். பாடசாலைக் கல்வியை முடித்த கையோடு தினபதியில் இணையும் வரை ஒரு சில ஆண்டுகள் பந்தடித்துத் திரிந்தேன் என்று குறிப்பிட்டேன் அல்லவா? அச்சமயத்தில் எனது சொந்த ஊரான திருகோணமலையில் திருகோணமலை கம்பன் கழகத்தை உருவாக்கினோம். நானும் நண்பன் திருகோணமலை பாலேந்திராவும் (இப்போது லண்டனில்) இணைச் செயலாளர்கள். என் நெருங்கிய உறவினரும் மும்மொழி வல்லாளரும் சிறந்த சமய, இலக்கியப் பேச்சாளருமான சந்திரசேகரம் பிள்ளை ஜெயச்சந்திரன் அதன் தலைவர்.

எஸ்.டி.சிவநாயகம் ஐயா, என் தந்தையார் போன்றோருடன் பள்ளிக்காலத்தில் கூடித் திரிந்தவரும், திருகோணமலையில் புகழ்பெற்ற ஆசிரியராக விளங்கியவருமான அறிஞர் கழகப் புலவர் பெ.பொ. சிவசேகரனார் (சிவசேகரம் மாஸ்டர்) கழகத்தின் பெருந்தலைவர். இந்த அணியோடு திருகோணமலையையே கலக்கும் அளவில் இரண்டு, மூன்று கம்பன் விழாக்களை நடத்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தினோம் – ஜெயராஜின் வழிகாட்டல், பங்களிப்பு மற்றும் பங்குபற்றுதலுடன்.

கழகப் புலவர் சிவசேகரனார், பண்டிதர் இ. வடிவேல் போன்றோரின் உதவியுடன் திருகோணமலையில் கம்பன் கழக வகுப்புகளைக் கூட நடத்தினேன்.

என் போன்று இளைஞனாக இருந்த ஜெயராஜை இலங்கை மக்கள் மத்தியில் அறியச் செய்தவர்களில் முதன்மையானவர் எஸ்.டி.சிவநாயகம் ஐயா. தமது கடைசிக் காலம் வரை ஜெயராஜ் மீது அன்பும், பாசமும், பரிவும், பெரும் மதிப்பும் வைத்திருந்தார் அவர். அவை பற்றி தனது நூல்களில் பல இடங்களில் சிலாகித்துப் பேசி உள்ளார் ஜெயராஜ். ஜெயராஜை மற்றவர்கள் அடையாளம் காண முன்னரே சிவநாயகம் ஐயா அடையாளம் கண்டார். தனது எழுத்துகளிலும் பத்திரிகையிலும் ஜெயராஜுக்கு முக்கிய இடம் கொடுத்தார். அதற்கு காரணம் திறமையைக் கண்டு மதிக்கும் எஸ்.டி.எஸ். ஐயாவின் பேருள்ளம் என்பேன்.

இளைஞர் ஜெயராஜை சிவநாயகம் ஐயா எப்படி மதித்தார், எப்படி அடையாளம் கண்டார் என்பவையெல்லாம் அருமையான விடயங்கள்.

இது 1981 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நடந்தது. தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்த எம்.ஜி.ஆரின் அரசு 1981 ஜனவரியில் பெரிய எடுப்பில் மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தது.

அச்சமயம் சிறிய அளவில் இளைஞர்களால் தாபிக்கப்பட்டிருந்த அகில இலங்கைக் கம்பன் கழகம் யாழ்ப்பாணத்திலிருந்து 'தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன், சென்னை' என முகவரியிட்டு அனுப்பிய கடிதத்தை கண்டு, அவரது வழிகாட்டலில் மாநாட்டு அமைப்பாளர்களினால் கழகத்தின் 10 பேருக்கு மாநாட்டுக்கு அழைப்புக் கிடைத்தது. 'பொடியன்கள்' ஜெயராஜும், கழகத்தின் செயலாளர் குமாரதாசனுமாக (பிற்காலத்தில் ஜெயராஜின் மைத்துனர்) நண்பர்களுமாக ஏழு பேர் மதுரை புறப்பட்டனர் – மன்னார் வழியாகக் கப்பலில்.

இந்த மாநாட்டில் பங்குபற்ற விசேட அதிதியாக பத்திரிகையாளர் சிவநாயகம் ஐயாவும் அழைக்கப்பட்டிருந்தார்.

மாநாட்டை ஒட்டி மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 'தொல்காப்பியர் அரங்கு' எனும் பெரிய ஆய்வரங்க மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது.

அங்கு நடந்தவற்றை ஜெயராஜின் உரையிலேயே இனி பாருங்கள்:-

**ஜெயராஜ் கூறுபவை**

*சபையில் எம்.ஜி.ஆர்., மேடையில் பேரறிஞர்கள், மண்டபம் நிறைந்த கூட்டம். இங்கு எப்படியும் பேசிவிட வேண்டுமென மனம் துடிக்க, இருந்த ஓரிரு நிமிடங்களுக்குள், என்ன செய்யலாம் என நானும், குமாரதாசனும் கடுமையாய் யோசித்தோம்.*

*எம்.ஜி.ஆர். வந்ததும், பொலிஸ் காவலால் மண்டபத்திற்கு அருகில்கூடப் போக முடியவில்லை. அன்றைய நிகழ்ச்சிக்கு நீதிபதி கோகுலகிருஷ்ணன் என்பவர், தலைமை தாங்கிக்கொண்டிருந்தார். திடீரென ஒரு யோசனை தோன்ற, குமாரதாசனின் கையிலிருந்த டயரியிலிருந்து ஒரு பேப்பரைக் கிழித்து, "அகில இலங்கைக் கம்பன் கழகத்திலிருந்து வந்திருக்கிறோம். இன்று எங்களை இங்கு பேச வரச் சொன்னார்கள், சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறோம்" என எழுதி, அருகிலிருந்த ஒரு பொலிஸ்காரரிடம், மேடையில் இருக்கும் தலைவர், எங்களை இன்று வரச் சொன்னார் எனப் பொய் சொல்லி, இக்கடிதத்தை அவரிடம் சேர்ப்பியுங்கள் என்று கொடுத்தோம். எங்களின் நல்ல காலம். நாங்கள் சொன்னதை உண்மையென்று நம்பி, அந்த அப்பாவிப் பொலிஸ்காரர், அதனை மற்றொரு பொலிஸ்காரரிடம் கொடுக்க, இப்படியே மாறிமாறி பொலிஸ்காரர்களின் கைகளூடு சென்ற கடிதம், இறுதியாய் மேடையில் இருந்த தலைவரைப் போய்ச் சேர்ந்தது. அது தேவதைகள் எங்களை ஆசீர்வதித்த நேரம் போலும். ஆச்சரியம்! தலைமை தாங்கிய நீதிபதியும் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. அக்கடிதத்தை நம்பிய அவரும், அடுத்து என்னைப் பேச அழைப்பதாய்ச் சொல்லி அனுப்பிய செய்தி, அதே பொலிஸ்காரர்கள் ஊடு எங்களை வந்து சேர்ந்தது. ஆச்சரியத்தில் அதிர்ந்து போனோம்.*

*என்ன பேசுவது? திடீரென, சந்தர்ப்பம் கிடைத்ததும் என்ன பேசுவதென்று தெரியவில்லை. ஓரிரு நிமிடத்திற்குள் முடிவு செய்தாக வேண்டிய சூழ்நிலை. அப்போது மேடையில் பேசிக்கொண்டிருந்த மலேசியக்காரர், மதத்தாலும் ஊராலும் தமிழர்களைப் பிரிக்குமாற்போல் பேசியது, மனத்துள் எரிச்சலைக் கிளப்பியிருந்தது. அந்த நிமிடத்தில் புத்தியில் மின்னலடிக்க, தமிழினத்தின் ஒற்றுமையை வலியுறுத்திப் பேசவேண்டுமென முடிவு செய்தேன்.*

*ஆச்சரியம் ஆனால் உண்மை. மாநாட்டில் பேசினேன்.*

*நிகழ்ச்சித் தலைவரான நீதிபதிக்குக் கொடுத்தனுப்பிய கடிதத்தில், அக் கடிதத்தை எழுதிய குமாரதாசனே கையொப்பமிட்டிருந்தார்.*

*அதனால் தலைவராக இருந்த நீதிபதி, எங்கள் கழகத்தின் பெயரையும், குமாரதாசனின் பெயரையும் சொல்லி, அடுத்துப் பேச அழைக்க, அதுபற்றிக் கவலைப்படாமல் நானே மேடைக்குச் சென்று பேசினேன். பதற்றத்தில் பெயர் மாற்றத்தைக் குறிப்பிடவும் மறந்து போனேன். தமிழின ஒற்றுமை பற்றி அன்றைய என் பேச்சு அமைந்தது. மாநாட்டு மண்டபம் முழுவதும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற, சங்கப்பாடல் வாசகம் எழுதப்பட்டிருந்தது. அதை வைத்தே என் பேச்சைத் தொடங்கினேன்.*

*யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது தமிழர்களின் இலட்சியமா? அல்லது தமிழர்களுக்குள் இருந்த பேதங்களைப் பார்த்து, சங்கச் சான்றோர் அவர்களுக்குச் சொன்ன புத்திமதியா? என நான் கேட்டதும், முன்னைய பேச்சாளரின் பேச்சால் சலித்திருந்த சபை, அந்த எனது கூற்றை இரசித்துக் கைதட்டியது. எனக்குள் உற்சாகம்.*

*எம்.ஜி. ஆருக்கும், கலைஞருக்கும் இருந்த பகை காரணமாக, இம்மாநாட்டிற்குக் கலைஞர் வரவில்லை. அது, அப்போது எங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டது. அதை வைத்து என் பேச்சைத் தொடர்ந்தேன். உலகத் தமிழர்க்குத் தாயகம் தமிழ்நாடுதான், ஈழத்தவர்களாகிய நாங்கள் மாமியார் வீட்டில் வசிக்கும் தமிழர்கள். தாய் வீடு ஒற்றுமையாய் இருந்தால்தான், மாமியார் வீட்டில் மகள் மரியாதையாய் வாழலாம் என்றேன். என் பேச்சின் குறிப்பறிந்து சபை மீண்டும் கைதட்டியது.*

*பிறகு, கலைஞர் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் பின்னின்றாலும்கூட, தமிழரின் உயர்வு என்று வரும்போது, அவரும் அதற்கு உறுதுணையாய் நிற்பார் என நம்புவதாய்ச் சொல்லி, ஒரு இராமாயணப் பாடலை உதாரணமாய் எடுத்துக் காட்டினேன். இராம இராவண யுத்தத்தில், இராமன் தன் வில்லில் அம்பேற்றியபோது, அவனது வலக்கை பின் சென்றதாம். அதைக் கண்ட இடக்கை, "இதுவரை சீதா கல்யாணம் போன்ற, நல்ல விடயங்களுக்கெல்லாம் முன்னால் ஓடி வந்த நீ, போர் என்றதும் பின்னே செல்கிறாயா?" என்று நகைத்ததாம்.*

*அதற்கு வலக்கை, "சண்டைக்குப் பயந்து நான் பின் செல்லவில்லை. போர்க்களச் சத்தத்தில் பேசும் சத்தம் மற்றவர்களுக்குக் கேட்காது, அதனால் காதுத்தன் காதடியில் சென்று, அம்பினை, இராவணனைக் கொல்லும்படி விடுவதா? தலைகள் பத்தும் கொய்யும்படி விடுவதா? என்று கேட்கவே சென்றேன்" என்றதாம்.*

*யாரோ சொல்லிக் கேள்விப்பட்ட இவ்விலக்கியச் செய்தியை, அங்கு சொல்லி அதற்கான பாடலையும் சொன்னேன். அதற்கும் பெரிய கைதட்டு கிடைத்தது. தொடர்ந்து, இதுபோல் மாநாட்டிற்கு வராமல் பின்னிற்பவர்களும், தமிழரின் நன்மை என்று வரும்போது, துணை புரிவர் என நம்புவதாய் நான் சொல்ல, சபையில் இருந்த கலைஞரின் ஆதரவாளர்கள், பெரிதாய்க் கைதட்டி அதை வரவேற்றனர்.*

*அப்படி நான் பேசியது எம்.ஜி.ஆருக்குப் பிடித்திருக்காது என்பதுகூட, அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. சபை தந்த ஊக்கத்தில் ஏதோ, பெரிய மனுசன் போல் அடித்துத் தள்ளிலே மொத்தத்தில் சபையில் அன்றைய எனது பேச்சுக்கு, பெரும் வரவேற்புக் கிடைத்தது. எனக்குப் பேச அனுமதிக்கப்பட்ட நேரம் மூன்று நிமிடந்தான். என் நேரம் முடிந்ததும் நான் தலைவரைத் திரும்பிப் பார்க்க, சபையின் ஆரவாரம் கண்ட உற்சாகத்தில், அவரும், பேசுப்பா, பேசுப்பா என ஊக்குவித்து, என்னை ஒன்பது நிமிடம் வரை பேசவிட்டார்.*

*பேச்சு முடிகிற நேரம். மேடையில் நின்றபடியே எம்.ஜி.ஆரைப் பார்த்து, 'மைக்'கில் பேசத் தொடங்கினேன். சபையில் பெரும் பரபரப்பு.*

*"உங்களின் நேரடி அழைப்பில் வந்திருக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால், இனி உங்களோடு பேச எனக்கு வாய்ப்புக்கிடைக்காது. பெருங்கொடையாளியான உங்களிடம் ஒன்றைக் கேட்கப் போகிறேன்" என்று சொல்லி நான் நிறுத்த, சபை, பரபரப்பின் உச்ச நிலையை அடைந்தது. 'கமரா'க்களெல்லாம் எனை நோக்கித் திரும்பின. அப்போது 'வீடியோ கமரா'க்கள் அதிகம் வந்திருக்கவில்லை. பெரிய பெரிய சினிமாக் 'கமரா'க்கள்தான். அங்கிருந்த 'கமரா'க்கள் எல்லாம் என்னையும் எம்.ஜி.ஆரையும் மாறி மாறி 'போக்கஸ்' பண்ணத் தொடங்கின. சபையிலிருந்தவர்கள் எல்லோரும் எழும்பி நின்று பார்க்கத் தொடங்கினர். எம்.ஜி.ஆர். என்னை நிமிர்ந்து பார்த்து, கண்களால் "என்ன வேண்டும்?" எனக் கேட்டார். நான் என்ன கேட்கப் போகிறேனோ என சபையில் பெரும் எதிர்பார்ப்பு. இளமை தந்த ஊக்கத்தில், நான் வெகு 'கூலாக' எம்.ஜி.ஆரிடம் "உங்களை நான் சந்தித்ததை ஊரில் சென்று நிரூபிக்க, எனது 'ஓட்டோகிராபில்' கையெழுத்திட்டுத் தாருங்கள்" என, குழந்தைத்தனமாய்க் கேட்டேன். சபையில் கொல்லென்று பெரிய சிரிப்பு. அப்போது எனக்கு இருபத்திநான்கு வயதுதான் ஆகியிருந்தது. அழைத்துச் சென்ற அறிஞர் எம்.ஜி.ஆர். கைகாட்டி என்னை அருகில் அழைத்தார். எவரைப் பற்றிய கவலையும் இல்லாமல்,*

*மேடையின் முன்னே இடப்பட்டிருந்த படி வழியாக, அவர் அருகில் சென்றேன். அவரது காலில் தொட்டு நான் வணங்க, அவர் என்னை உச்சிமுகந்து ஆசீர்வதித்தார். பின்னர் 'ஓட்டோகிராபில்' கையொப்பமிட்டுத் தந்தார். அடுத்த நிமிடமே, நான் அன்றைய சபையின் கதாநாயகனானேன்.*

(வளரும்.....)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

அங்கம் 77

**237. பாலசிங்கத்தை எப்போதிருந்து அறிந்திருந்தீர்கள்?**

நான் அவரை நேரில் சந்தித்தது 1979 காலங்களில். லண்டனுக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வு (TRRO) கழகத்தின் சார்பாக சென்றிருந்தபோது 77ஆம், 78ஆம் ஆண்டுகளில் பிரபாகரனும், உமா மகேஸ்வரனும் பாலசிங்கத்தைப் பற்றி பேசி, அவர் நிறைந்த ஈடுபாட்டுடன், லண்டனிலுள்ள தமிழ் இளைஞர்களுக்கு அரசியல்வகுப்புகள்நடத்துகிறோம்எனக்கேள்விப்படுகிறோம் என்றும், எனது தொடர்புகள் மூலம் அறிந்து சொல்லுமாறும்கேட்டார்கள். நான்விசாரித்தபொழுது அரசியலில் ஆர்வமும் தமிழீழத்தில் நேசமும் காட்டிய இளைஞர்களுக்கு அரசியல் வகுப்புகள் தருகிறார் எனவும், முக்கியமாக இடதுசாரி சித்தாந்தத்தில் பிடிப்புள்ள ஈரோஸ் அங்கத்தினர்களும் பத்மநாபா, மகா உத்தமன் போன்றோரும் அவருடன் ஈடுபாடாக இருக்கிறார்கள் எனவும் கேள்விப்பட்டவற்றைத் தெரிவித்தேன்.

நான் லண்டனுக்கு புறப்பட இருந்த நேரத்தில் பிரபாகரனும் உமாமகேஸ்வரனும் என்னைச் சந்தித்து ஈரோஸ் இயக்கத்தினருடன் தங்களுக்குப் பணபரிமாற்றங்களில் சில வேற்றுமைகள் உண்டு, அதை அவர்களுடன் பேசித் தீர்த்து வைக்கவேண்டும் எனவும், பாலசிங்கத்தை அவர்களுக்காக சந்தித்துப் பேசி, எனக்கும் திருப்தி இருந்தால் அவர் தங்களோடு சேர்ந்து இயங்குவது பற்றிப் பேசுமாறும் கேட்டார்கள்.

ஏதோ பெயர்களை சொன்னவுடன் பின்னாலறிந்த இயக்கங்கள் மாதிரியும் பெரிய பணப்பரிமாற்றம் என்றும் கணக்கு போடாதீர்கள். இது ஆரம்பக் காலங்கள், ஆதரவுகள் தேடிய நேரங்கள். இயக்கத்திற்கு வந்தவர்கள் பசி,பட்டினியுடன் பண்ணைகளில் வேலை செய்து, பாசமலரில் சாவித்திரி சில்லறைகலைச் சேர்த்து பவுடர் பேணியில் சேமித்து, சிவாஜிக்கு பொம்மை கடைக்கு முதலாகக் கொடுத்த மாதிரி சிறு தொகை.

பின்னர் தான் வங்கிக் கொள்ளைகளில், அவர்கள் இயக்கங்களுக்காகப் பணம் புரட்டியது.

**238. நீங்கள் அவருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டீர்களா?**

முதலில் பேச்சுவார்த்தைகள் என்றில்லை. சந்தித்தோம். அரசியலில் அக்கறையிருந்த பல இளைஞர்கள் அவரைப் பற்றி திருப்திப்படும் முறையில் பேசினார்கள். பல காலமாக லண்டனில் குடியேறியிருந்தவர்கள் அவரை அறிந்து கொண்டிருக்கவில்லை. அறிந்தவர்கள் அவரை ஒரு இடதுசாரியாகவே பார்த்தார்கள். இன விடுதலையை விரும்பியவராகச் சொல்லவில்லை. அவர் ஒரு புரட்சியில் முழு இலங்கையும் அதனை ஆண்டு கொண்டிருக்கும் முதலாளிய வர்க்கத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்றுதான் பேசுகிறார் என்றார்கள். ஆகவே ஒருவர் என்றில்லாமல் பல அபிப்பிராயங்கள் கொண்டவர்கள் அவரிடம் அழைத்து சென்று, பாலசிங்கத்துடன் கூட்டிச் சென்ற வர்களில் கருத்தோட்டத்தில் சம்பாஷித்தேன்.

நான் அதில் உணர்ந்தது என்னவென்றால் பல்வேறு கருத்தைக் கொண்டவர்கள் அவரது அரசியல் கருத்தை மதித்தார்கள். சேர்ந்து செயல்பட்டவர் நம்பிக்கையானவர் என்ற அபிப்பிராயத்தை எனக்கு ஏற்படுத்தினார்கள். எங்களது சந்திப்புக்களினூடாக, பாலசிங்கம் அடெலை அவரது முதல் மனைவியின் மரணத்துக்குப் பிறகு ஓரிரண்டு வருடங்களுக்கு முன் மணமுடித்திருந்தாரென்பதும், சாதாரண நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தார் என்பதும் புரிந்தது.

தொழில் ரீதியாகவும் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தில் இணைந்து பணியாற்றிய பலரின் பின்னணிகள், நான் லண்டனில் சேர்ந்து இயங்கியவர்கள் விவரங்கள் மூலம் அவர் என்னை மேல்தர வர்க்கத்தின் சிந்தனையாளன், ஆனால் பொதுச் சேவையில் அக்கறையுள்ளவன், தனது தத்துவங்களை ஏற்காதவன் என்ற எண்ணத்தில் இருந்தார்.

அவற்றின் அடிப்படைகளை ஒட்டி பேசும் போதுதான் அவரின் குறும்பு குயுக்தி, நக்கல் போன்றவை ரசிக்க கூடியனவாக இருந்தன.

தான் ‘சிரித்திரன்’ ஆசிரியர் சிவஞானசுந்தரத்தின் நல்ல நண்பனென்னும், அவரோடு சேர்ந்து “சவாரி தம்பர்” கேலிச் சித்திரங்கள் வரைவார் என்றும், தனக்கு சர்வதேச அரசியலில் பற்றும் வந்தது என்றும் சொன்னார். தான் வீரகேசரியில் ‘ரொய்ட்டர்’ செய்திகளைத் தமிழ்ப்படுத்தும் வேலையில் இருந்தார் என்றார். பின்னர் அந்த மொழிபெயர்ப்பு வழியால், பிரித்



சிந்தனையாளர் இளம் பாலசிங்கம்

தானியா ஸ்தானிகராலயத்தில் மொழிபெயர்ப்பாளராகச் சேர்ந்து அவர்கள் உதவியுடன் லண்டன் வந்து வாழ்ந்தவர். அவரது தாயார் கத்தோலிக்க பின்னணியில் அவரை வளர்த்திருந்தாலும் பின் மெதடிஸ்ட் மதத்தில் முதல் மனைவியை கைப்பிடித்து, அவரை இழந்த பொழுது அவரது பூதவுடலை லண்டனிலிருந்து கொழும்புக்கு எடுத்துச் சென்று, மனைவியின் தேவாலயத்தில் ஆராதனைகள் செய்து அதனை கனத்தை மயானத்தில் புதைத்தவர். தான் காதலித்து, மணந்து, நோய் வாய்ப்பட்டு தன்னைப் பிரிந்தவரின் விருப்பங்களை நிறைவேற்றவேண்டும் என்ற மனிதாபிமானம் அவரில் இருந்தது. மதங்களையும் சித்தாந்தங்களையும் அவர் அறிந்திருந்தாலும் அவர் அவற்றில் அக்கறையோ வழிபாடோ செய்தவரல்லர். அதேசமயம் அது நாத்திகமுமல்ல. ஆகவே எங்கள் பேச்சுக்களில் ஒன்று சேர்ந்த அடிப்படை ஒற்றுமைகள் இருக்கவில்லை. அவர் என்னை மேலாண்மைகளின் பிரதிநிதியாக பார்த்தார். இடதுசாரித் தத்துவங்களுக்கும் எனக்கும் வெகுதூரம் என எண்ணினார்.

நான் அவரை மென்மையான சுபாவம் கொண்ட நல்லவராக, சிந்தனையாளனாகப் பார்த்தேன். ஆனால் அவர் பேசும் இடதுசாரி தத்துவங்கள் நான் அறிந்த விடுதலை ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு ஒத்துவராது என்ற எண்ணமே வலுத்தது. ஆகவே நண்பர்களாக “சந்தித்தது சந்தோஷம்” என்ற அடிப்படையில் பிரிந்தோம்.

பின் ஒரு நாள் விடுதலைப் புலிகளின் தொடர்பாளராக லண்டனில் இருந்த கிருஷ்ணன் என்பவரை தொடர்பு கொண்டு என்னுடன் பேசவேண்டும் என ஒழுங்கு செய்யக் கேட்டிருந்தார். அதன்படி அவரைச் சந்திக்கச் சென்றபோது மனம்விட்டுப் பேசினோம்.

**239. அப்படி என்ன பேசினீர்கள்?**

பாலசிங்கம் எங்களது முன்னைய பேச்சுக்களில், நான் பெயர் சொல்லி அறிமுகப்படுத்திய விடுதலை போராளிகள் எல்லாரையுமே, ஓர் அரசியல் அடிப்படை சித்தாந்தம் கொண்டவர்களல்லர்,அவர்கள் தனிமனிதப் படுகொலைகளை மேற்கொள்வதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை வளர்க்க முடியும் என்று எண்ணுகிறார்கள் எனச் சிலேடையாகச் சொல்லி லெனின் சகோதரர் ‘நட்ரோனிக்’ இயக்கத்துடன் சேர்ந்து முன்னெடுத்த அந்தப் பாதை தோற்றுபோனதையும் விளக்கப்படுத்தியிருந்தார்.

அதை திரும்ப தொட்டு, விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தனிமனிதப் படுகொலைகளிலிருந்தே அனைத்தும் ஆரம்பமாகியிருந்தன, அவர்கள் மக்களைப் போராட அணி திரட்டவில்லை, மக்கள் இவர்களது வீரச் செயல்களை செல்லச்சந்நிதியில் நடக்கும் காவடிகளைப் பார்த்து ரசிப்பது போல ரசிக்கிறார்கள், ஆதலால் இவர்களும் விடுதலைக்காகத் தான் கொலை செய்கிறோம் என நம்பி எதற்கெடுத்தாலும் கொலை, கொலை என்றே தொடர்ந்து மக்களையும் விரக்திக்கு உள்ளாக்குவார்கள், நட்ரோனிக்கின் நடவடிக்கைகள், மாவோவின் இராணுவப் படைப்புக்கள் மக்கள் இராணுவத்தை எப்படி வெற்றிகரமாக கட்டமைப்பது என்று சொல்லித் தந்திருக்கிறது என்றும் இவற்றை இவர்கள் விளங்கவேண்டும் என்றும் பாடம்தந்தார்.

அதற்கும் மேலாக, எதேச்சையாகக் கட்டுப்பாடில்லாமல் பெருந்துடிப்புடன் கிளம்பியிருக்கும் தமிழ் தீவிரவாத இளைஞர்களின் அரசியலானது ஒரு புரட்சிகர அரசியற் சித்தாந்தச் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகரமான இயக்கமாக வளரவேண்டும் என்றும் பாடம் தந்து தான் அதற்கு உதவ விரும்புகிறார் எனவும் சொன்னார்.

நானும் விடவில்லை. பாலா உங்களது இடதுசாரி சித்தாத்தங்களை நானும் மதிக்கிறேன். ஆனால் அவற்றில் எனக்கு நாட்டமில்லை என்பதும் உண்மை. ஆனால் தமிழ் மக்கள் தேடுவது இன விடுதலையே ஒழிய அங்கு ஒரு புரட்சியல்ல. உன்மத்தமாக எம்மை ஒதுக்குகின்ற சிங்களப் பேராண்மையை நாங்கள் முறியடிக்க வேண்டும். அதற்கு லெனினும், கார்ல்மார்க்ஸும், மாவோவும் தேவையில்லை. எங்களது முன்னோரான சாணக்கியரும், பாரதப் போரை நடத்திய கிருஷ்ண னும் இராமாயணம் தந்த படிப்பினைகளும் போதும். நான் இருந்த வாழ்க்கையிலிருந்தும் என் போல் பலரும் வெளியேறி எமது நேரத்தைத் தர வந்தோமென்றால் அது இனத்தின் விடுதலைக்காக அன்றி ஒரு சமூகப் புரட்சிக்கு அல்ல. இங்கிருந்து மற்ற மார்க்ஸியவாதிகளோடு தர்க்கம் பேசலாம். ஆனால் அங்கோ அந்த இளைஞர்களின் அர்ப்பணிப்பு வேறு என்று விளக்கினேன்.

கடைசியாக அமிர்தலிங்கம், எதிர்க்கட்சித் தலைவராகி நான் இருக்கும் சமயம் இங்கு இருக்கிறார். பல இடங்களுக்கு அவருடன் போகிறேன். அவர் இதுவரை வந்த நாடாளுமன்றப் பாதையை மதிக்கிறோம். ஆனால் இதற்கு மேல் இன்றைய சிங்களத்தின் உன்மத்தத்தில் விடுதலையை நோக்கி அவர்கள் முன்னேற முடியாது என நான் விவரித்த, இளைஞர்கள் நாடாளுமன்றப் பாதையைத் தேடாதவர்கள், அவர்கள் தியாகம் செய்து வந்தவற்றையும், அவர்களின் அர்ப்பணிப்பையும் பாருங்கள், அதுதான் தமிழ் சமுதாயத்திற்கு கிடைத்துள்ள நம்பிக்கையான நல்ல களிமண், அதிலிருந்து குடம், சட்டி செய்வதா, பொம்மைகள் செய்வதா என்பது எம்மை போன்ற குயவர்களின் வேலை. நான் அரசியல்வாதியல்லன். அகதிகள் நிவாரணத்தை அடிப்படையில் கொண்டு இவர்களுக்கு உதவிகள் செய்கிறோம். நீங்கள் அரசியல்வாதி. அவர்களுக்கு இன விடுதலைக்கு ஏற்ற அரசியல் வழிகளை சமைக்க உதவிகள் செய்யுங்கள். போகுமிடம் எதுவென்பது தெரியவேண்டும். எமது தொழிலை மனச் சுத்தியுடன் செய்யவேண்டும். நீங்கள் விரும்பினால் நீங்கள் அவர்களைத் தமிழ் நாட்டில் சந்திக்க (நான் குறிப்பிட்டது உமா மகேஸ்வரன், பிரபாகரன்) கிருஷ்ணன் மூலம் ஒழுங்குகள் செய்கிறேன் என்றேன். பாலசிங்கம் தான் பதில் தருவார் எனச் சொன்னார்.

அது பின் சாதகமாக வந்ததால் கிருஷ்ணனிடம் சொல்லி அவர் சென்னையில் அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து, என்னோடு கொழும்பில் தொடர்பு கொள்ள வேண்டியவற்றையும் செய்தேன்.

(வளரும்..........)

# Tokyo Olympic Games: When are they? How will COVID affect them?

The Tokyo Olympic Games have begun on 23rd of July and will go on till the 8th of August. Thousands of athletes are competing, organizers say the event can be held safely, despite calls for it to be cancelled because of COVID. The games were postponed last year because of COVID.
This international sports events will feature 33 sports at 339 events across 42 venues. The Paralympic Games are due to run between 24th of August and 5th of September. It will feature 22 sports at 539 events across 21 venues. Most events are in the greater Tokyo area although some football games and marathon will take place in the Northern City of Sapporo.

## What's happening with COVID in Japan?

A new ware of infection began in April. Japan only began vaccinating in February and only 22% of its population is fully vaccinated. In Tokyo and Osaka the two cities will be fully vaccinated due to the recent surge. Authorities hope over 65% will be fully vaccinate a by the end of July. Entry to Japan to foreigners from 159 countries is currently banned. That will mean mostly empty stadium. Athletes don't have to be vaccinated, though international Olympic committee officers expect around 80% will be vaccinated.

There are only around 1000 spectators since the games started after a state of emergency declared in Tokyo on 8th of July. It will stay in place until 22nd of August. Tokyo 2020 president Seiko Hashimoto said she was "sorry to those who purchased tickets. The games were not cancelled, because only the IOC can cancel the event. IOC president Thomas Bach insisted the games must go ahead" to give hope for the future.

Tokyo organizers were to cancel the contract. The risk and loses would probably fall on the Japanese side.

People pulled out earlier in the year because of fears about COVID and extra pressure on the health care system. Japan's doctors union said it was impossible to hold the games given the pandemic.

The Olympic had been cancelled by two world war in 1916. The winter and summer games in Italy and Britain in 1944 never happened either. The winter Olympic Games in 2022 will be in Beijing and the summer Olympic's in 2024 will be in Paris.

## Ways you can help and violence against girls

**There is a widespread protest and agitation in all the major cities of the island against the mysterious death of Hishalini, a 16 years old girl who was working a domestic aid in the house of a leading politician. The people are very furious and dormant? An impartial investigation into this crime and they appeal to the government to render justice. We think it is appropriate to have a look at the following suggestions for better awareness among everyone and to how we could prevent the violence against the little girls.**

**When you hear violence against little girls what comes to mind?**

Perhaps it is the most recent kidnaping of Nigerian school girls by Boko Haram militants. Or maybe it is the 120 million girls from every corner of the world who have experienced sexual violence. Or the harassment and catcalling your sisters face on their way to school, in classroom, at homes, at refugee camps and playgrounds.

Girls experience harassment and violence. In the United States 1 in 10 girls is sexually taunted by the time she is 11. Girls with mental disabilities are at risk.

Then, there are 750 million women and girls worldwide who married as children. They are socially isolated and become incredibly vulnerable to physical sexual violence within the home.

The consequence of harassment and violence are deep and long lasting. Girls steer clear of male –dominated fields of study or drop out of school altogether because they feel unsafe. They learn to stay silent and invisible.

Here are 5 ways you can join the movement to build a world where all girls and women can live free from fear and violence.

Don't abuse: Violence against girls and women includes bullying harassment, physical and sexual assault. It happens at home and in public. Be part of the solution, not the problem.

Talk to a girl or boy in your family or community about sexual abuse: tell them that unwanted contact is not acceptable and that it's ok to speak up if someone makes them uncomfortable. Point them to digital social networks such as U-Report. Where they can join a global community of almost 5 million to speak out.

Support young activists mobilizing to end violence against girls by sharing their stories with your friends, family, and larger networks: Celebrate their accomplishments and help change the conversation. Let people know that this generations of young girls and boys is where the cycle of violence ends.

Join efforts such as Time's Up: Hold perpetrators accountable for abuse and ensure that girls will be able to live and work in safety when they grow up.


Support survivors and call out sexual violence and harassment when you see it. Abuse keeps happening when people keep quiet about it. We all need to send a clear message that violence against women and girls will not be tolerated.

People around the world come together to stand up against and call out violence against women and girls. Gender based violence (GBV) continues to plague communities worldwide.

From female genital mutilation, child marriage, and human trafficking to domestic violence and homicide; women and girls face continued struggles.

It can be hard to understand the difficulties faced by others from the comfort of our homes that's why we have put together 16 key facts to show just why we need to take action to end violence against women and girls (VAWG).

1. Woman worldwide have experienced physical and/or sexual violence in their life time.
2. Globally, as many as 38% of murders of women are committed by a male partner.
3. 200 million women and girls have experienced female genital mutilation (FGM/C)
4. Each year 15 million girls are married before the age of 18. That is 28 girls every |minute.
5. It is estimated that up to 10 million children are victims of child sexual exploiloation.
6. School related gender based violence means that I in 4 girls say that they never feel comfortable using a school washroom.
7. Between 80 and 100 million girls are missing from the world population – victims of gender-based infanticide, femicide, malnutrition and neglect.
8. As many as 1 in 4 women experience physical and/or sexual violence during pregnancy.
9. As many as 150 million girls worldwide are raped or sublet to sexual violence each year, by someone in their family circle.
10. over 700 million women alive today were married as children (under the age of 18).
11. There are 5000 so-called 'honour' killings reported every year around the world. Experts estimate that the actual number of 'honour' killings is much higher.
12. 12. 30% of female globally have reported that their first sexual experience was forced.
13. 58% of new HIV infections among young persons in 2015 occurred among adolescent girls and young women. Violence affect the ability of girls and young women to protect themselves from HIV.
14. Domestic violence is a global problem that affects 35% of women worldwide.
15. Globally, around 137 women are killed by the partner or a family member every day.
16. Women between the age of 15 and 44 are at high risk of rape and domestic violence than cancer, accidents, malaria or injuries.




# Conjunctions

In grammar, a conjunction is a part of speech that connects words, phrases or clauses. Common conjunctions: and, as, but, so, although, unless, if, despite, either, or, both, neither, nor, since, even, because.

**E.g:-**

1. The data was gathered through questionnaires and interviews.
2. It's raining outside, yet it's the middle of summer!
3. I have to wake up early, so I don't stay out late.
4. While you were at school, the mailman delivered a package.
5. She is studying both theater and communications at college.

**Exercise-1**

Fill in the blanks with most appropriate conjunctions.

1. She will not go to the game .................... she is driven there.
2. He speaks as ................ he knows everything.
3. We were locked out .................. we lost our keys.
4. I like coffee ...................I prefer tea.
5. We waited ..................my sister came home.
6. The dog laid down ...................... she was at the gate.
7. She started early ..................... she would finish in time.
8. You will not improve ................ you don't study.
9. Do not climb that tree ............. you might fall.
10. .......................... they tried, they did not win.

(because, until, unless, or, if, but, although, as though, so that, if)

**Exercise-2**

Write the missing conjunctions. Try not to use 'and' more than once. A new tunnel was planned ........................ there was too much traffic for the only tunnel under the river. .................... it would be useful, it would be expensive .................... a toll collected from the drivers. ..................... local people protested about the toll, they were given special passes. Work was delayed for two months .................. there was a flood. ................. the flood went down The workers made up for lost time.

**Answers:**

Exercise 1 – 1.unless 2.if 3.because 4.but 5.until 6.as though 7.so that 8.if 9.or 10.although

Exercise 2 – 1.as 2.Though 3.Unless 4.when 5.become 6.As soon as

Thuvaraga Loganathan
Kn/Pallai Central College




# Past Perfect Tense

The format of constructing sentences in passive
object + had been + past particple + subject

**Eg.** They had collected some stamps (active voice)
**Subject** : They
**Be verb** : had
**Verb** : collected
**Object** : some stamps

Some stamps had been collected by them.(passive voice)

**Step 1:** Write the object
**Step 2:**Then write had
**Step 3:** We should add been
**Step 4:** Write the V3 C (past participle) of the verb.
**Step 5:** Write 'by' and subject

**Let's practise**

1.The manager had warned him.
2. A man had repaired his vehicle.
3. He had posted the letter immediately.
4. They had sold the tickets.
5. They had swept the hall.
6. They had seen this house earlier.
7. They had filled the vacancies already.
8 Farmers had ploughed the fields.
9. The teachers had finished the syllabus.
10. Someone had damaged the articles

**Answers**

1. He had been warned by the manager:
2. His vehicle had been repaired by a man.
3 . The letter had been posted by him immediately.
4. The tickets had been sold by them.
5. The hall had been swept by them.
6. This house had been seen by them earlier.
7. The vacancies had already been filled by them.
8. The fields had been ploughed by the farmers.
9. The syllubus had been finished by the teacher.
10. The articles had been damaged by someone.

# LET'S CHANGE THESE SENTENCES INTO REPRORTED SPEECH

(2) SIMPLE PAST ⏩ PAST PERFECT

**EG:**

Ragini "The bus left at nine." ⏩ Ragini said that the bus had left at nine.

**The way of writing the reported speech**

- First, we write the subject pronoun (He, She, They, Teacher)
- Then we put reporting verb (said, ordered) and that also.
- Then write the changed pronoun (he, she, them).
- Then write had + V3 (ate ⏩ had eaten)
- Finally write the object, propositions, etc.
- [NOTE: If, adverbs of time are identified in direct speech, we want to change that when we write the reported speech. (now ⏩ then, ago ⏩ before)]

**EXERCISE;**

1. Teacher: "I forgot your papers."
2. Vithu: "We joined the get together party."
3. Mother: "I walked to the temple."
4. William: "I connected the WIFI in your home yesterday."
5. Friend (to me): "Rahul left the seminar early."
6. Policeman: "They went this side."
7. Ganesh: "My sister didn't go to the uni versity."
8. I (to friend): "I lived here in 2015."
9. King (to the soldiers): "You attack them."
10. Doctor (to father): "You took rest prop erly."

**ANSWERS;**

a. Teacher said that she had forgotten my papers.
b. Vithu said that they had joined the get together party.
c. Mother told that she had walked to the temple.
d. William said that he had connected the WIFI in my home the previous day.
e. Friend said to me that Rahul had left the seminar early.
f. Policeman said that they had gone that side.
g. Ganesh said that his sister hadn't gone to the university.
h. I said to my friend that I had lived there in 2015.
i. King ordered the soldiers that they had to attack them.
j. Doctor said to my father that he had taken rest properly.

Subeedahana Jeyakanth
2023 A/L Bio
Kn/Pallai Central College.


# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 09 | கணிதம் | அலகு 16


## முக்கோணியின் கோணங்கள்

ஒரு முக்கோணியின் மூன்று கோணங்களினதும் கூட்டுத்தொகை இரண்டு செங்கோணங்கள் ஆகும்

* ஒரு முக்கோணியின் உச்சிகளில் உட்புறமாக அமையும் கோணங்கள் அகக்கோணங்கள் எனப்படும்.





* முக்கோணி ஒன்றின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை 180⁰ ஆகும்
உதாரணம் :



$X + 75^0 + 40^0 = 180^0$
$X + 115^0 = 180^0$
$X = 180^0 - 115^0$
$X = 65^0$


05. X இன் பெறுமானம் காண்க.

01. 02. 03.




.................................... .................................... ....................................

04. 05. 06.




.................................... .................................... ....................................

நாற்பக்கலின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை 360⁰ ஆகும்.





நாற்பக்கலொன்றின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை 360⁰ ஆகும்.
உதாரணம்



$X + 85^0 + 100^0 + 95^0 = 360^0$
$X + 280^0 = 360^0$
$X = 360^0 - 280^0$
$X = 80^0$


06. X இன் பெறுமானம் காண்க.

01. 02. 03.



.................................... .................................... ....................................


04. 05.



.................................... ....................................

முக்கோணி ஒன்றினதும் நாற்பக்கல் ஒன்றினதும் புறக்கோணங்களின் கூட்டுத்தொகை 360⁰ ஆகும்.
* ஒரு முக்கோணியின், நாற்பக்கலின் பக்கங்களை ஒரொழுங்கில் நீட்டும் போது அதன் உச்சிகளில் வெளிப்புறமாக அமையும் கோணங்கள் புறக்கோணங்கள் எனப்படும்.


* ஒரு முக்கோணியின், நாற்பக்கலின் பக்கங்களை ஒரொழுங்கில் நீட்டும்போது உண்டாகும் புறக்கோணங்களின் கூட்டுத்தொகை 360⁰ ஆகும்.



$X + Y + Z = 360^0$ $a + b + c + d = 360^0$


**07. பயிற்சி**

01.




.................................... .................................... ....................................

02.



.................. .................. .................. ..................


**தேற்றம்**
முக்கோணி ஒன்றின் பக்கமொன்றை நீட்டுவதால் உண்டாகும் புறக்கோணம் அதன் அகத்தெதிர்க் கோணங்களின் கூட்டுத்தொகைக்கு சமனாகும்.





$d = a + b$

**08. பயிற்சி**


01.




05.




02.




06.




07.




03.



08.



04.



**நேற்றைய வினாக்களுக்கும் இன்றைய தின வினாக்களுக்கும் உரிய விடை நாளை பிரசுரமாகும்.**

**ஆக்கம் - தாமினா சுபாகரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி) யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம் ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**




# சமூகம் காட்டும் வழி எப்போதும் சரியானது இல்லை!

நீங்கள் உங்கள் சொந்தப் புத்தியை பயன்படுத்தி விடக்கூடாது என்பது சமூகத்தின் ஒரு எழுதப்படாத சட்டம். சமூகம் எப்படி நடக்கிறதோ நீங்களும் அப்படியே நடக்க வேண்டும். நீங்கள் தனித்துத் தெரிந்தால் உங்களை ஏளனம் செய்வார்கள்.

அழகு தான் ஒருவர் காதல் ஏற்பட முதல் காரணியாக அமைகிறது. இதை பலரும் ஒத்துக் கொள்வதில்லை, கேட்டால் மனசு தான் முக்கியம் மண்ணாங்கட்டி தான் முக்கியம் என்று அளந்துவிடுவார்கள். அப்படி மனதைப் பார்த்து காதல் வர குறைந்தது இருவரும் 3 மாதங்களாவது பழகியிருக்க வேண்டும்.

சுற்றத்திற்காக வாழ்வது முட்டாள்தனம் என்ற உண்மையை சமூகம் ஏற்றுக்கொள்ளாது, ஆனால் அதை உடைத்து வாழும் வாழ்க்கை நமக்கான நிம்மதியைத் தரும் .

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று சொல்வார்கள். நாம் நன்றாக வாழ்வதோடு, மற்றவர்களையும் நன்றாக வாழ வழிவகை செய்வோம்.

# குற்றங்களை சமூகத்தில் அனுமதிக்காதீர்கள்

நம்பிக்கை துரோகிகளை அவர்களைப்பற்றித் தெரிந்தும் ஒதுக்கிவைக்காமல் உறவு, நட்பு என்ற பெயரில் அல்லது சொந்த ஆதாயம் கருதி சகமனிதனாக ஏற்றுக்கொள்வதும் அவர்கள் தவறை மறப்பதும் ஏற்றுக் கொள்ளவே முடியாத விடயம்தான் .


தவறு செய்பவர்களைவிடவும் தவறை கண்டு கொள்ளாமல் அவர்களுக்கு ஆதரவளிப்பவர்கள் இருப்ப தால்தான் குற்றங்கள் பெருகுகின்றன.

எனக்கு அந்த கிரிமினலால் பாதிப்பில்லை என்று அவர்களை அனுசரிப்பதும், அவர்களால் கிடைக்கும் ஆதாயத்திற்காய் அவர்களை ஆதரிப்பவர்களும் அந்தக் கிரிமினலைவிட மோசமானவர்கள்.

கிரிமினல்களாவது ஏதோ ஒரு அபாயத்தை எதிர்கொண்டு தங்கள் வாழ்வை பணயம்வைத்து தவறைச் செய்கிறார்கள்.

கிரிமினல்களுக்கு அத்தகையவர்களின் ஆதரவு தான் எதையும் செய்யும் மனோபலத்தை கூட்டுகிறது. எனவே அவர்களை ஒதுக்கிவைக்காமல் அவர்களுக்கு ஆதரவாக செயல்படுகிறவர்கள்தான் தங்கள் சுயநலத்திற்காய் எந்தக் கஷ்டமுமின்றி மிக எளிதாய் இந்த சமூகத்திற்கு நாசத்தை விளைவிப்பவர்கள்.

தவறுசெய்கிறவர்களை ஒதுக்கிவைக்கும் மனதில்லாமல் அவர்களோடு இணைபவர்கள் அருவருப்பானவர்கள்.




# மனிதர்களை புரிந்து கொள்ளமுடியாது!

இன்னொருவர் இருக்கிறார், அவருக்கு என்ன தேவை? அவர் என் ஆசைப்படுகிறார்? நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்? என்பதை நாம் அறியாமலேயே பல காலம் வாழ்ந்து விடுகிறோம். அது நட்பு ஆனாலும் சரி, வாழ்க்கைத்துணை ஆனாலும் சரி, குடும்ப உறவுகள் ஆனாலும் சரி, இதை நாம் முழுமையாக தெரிந்து கொள்ளும் போது கண்டிப்பாக நம்மால் அவர்களுக்கு ஒரு நல்ல உறவை தரமுடியும்.

மனித மனம் எவ்வளவு விசித்திரமானது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனை தன் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டால் கூட புரிந்து கொள்ள முடிவதில்லை.

ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்கிறோம் என்று நாம் பெயரளவில் சொன்னாலும் நம் யாராலும் அடுத்தவரை முழுமையாகப் புரிந்து கொள்ளவே முடியாது.

இந்த உளவியல் உண்மைகளை உண்மையாக ஒருவர் கொஞ்சமேனும் தெரிந்து வைத்திருந்தார் என்றால் அவருக்கு வாழ்க்கையை மனிதர்களுடன் சுமூகமாக நடத்திச் செல்வதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

எப்பொழுதுமே மனிதமனம் சுயநலம் ஆகவே யோசிக்கிறது.

இந்த உண்மையை புரிந்து கொள்வது மிகக் கடினம்.

ஒருவர் கலகலப்பாகப் பேசிக்கொண்டே இருக்கிறார் என்றால் அவருடைய வாழ்வில் எந்த வருத்தமும் இல்லை என்று பொருள் அல்ல. உண்மையில் மிக மிக கலகலப்பாக பேசுபவர்கள் எதையோ மனதில் ஒளித்து வைத்துக் கொண்டு பேசுகிறார்கள் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

# நம்முடன் சேர்ந்து வம்பு பேசுபவர் நம்மைப் பற்றியும் வம்பளப்பார் !!

நாம் உபயோகப்படுத்தப்பட்டு தூக்கியெறியப் பட்டோம் என்ற உணர்வு தான் உலகத்திலேயே கொடுமையான உணர்வு.

நாம் உண்மையாக அன்பு செலுத்தும் ஒருவரிடம் வெகு நாள்கள் கோபத்துடன் இருக்க முடியாது.

ஒருவர் மீது நம் கோபம் மூன்று நாள்களுக்கு மேல்தொடருமானால், அவர் மீது நமக்கு உண்மையான அன்பு இல்லை என்று அர்த்தம்.

பொதுவாக எல்லோரிடமும் நன்றாக பழகுபவரே அதிக மனக் காயம் அடைகிறார்.

ஒருவர் நம்மிடம் பொய் சொல்கிறார் என்று நம்பினால், நாம் ஒன்றுமே சொல்லத் தேவையில்லை. அவரே அதற்கான காரணங்களை பட்டியலிடுவார்.

நமக்கு தெரிந்த ஒரு அறிவுரையை ஒருவர் சொல்லும்போது, எனக்குத் தெரியும் என்று சொல்லாமல் உண்மைதான் என்பது நாகரிகமானது.

மனித மனது ஞாபகங்களை அசை போட்டுக் கொண்டு இருப்பதால் தான் அது உயிர்ப்புடன் இருக்கிறது.

வாதிடும் நபர் பெரும்பாலும் தன் கட்டுப்பாட்டை இழந்து கத்தவே செய்வார். பதிலுக்கு கத்துவது தான் மனித இயல்பு, அதை செய்ய வேண்டாம், அமைதி காத்து மெதுவாக பதில் கொடுப்பதே வெற்றி கொடுக்கும்.

எப்போதும் நம் உள்ளுணர்வு சரியாக தான் இருக்கும். ஏதோ இருக்கிறது என்று அது சொன்னால், கண்டிப்பாக ஏதோ இருக்கும்.

கோபம், ஏமாற்றம், இப்படி நம் உணர்வுகளுக்கு ஞாபகம் என்னும் தீனியை போட்டுக்கொண்டு இருப்பதால் தான், அதை விட்டு நம்மால் விலக முடியவில்லை.

நம் நடத்தை மற்றும் தோற்றத்திலும் மற்றவர்கள் கவனிக்கும் அளவை விட அவர்கள் அவ்வாறு கவனிப்பதாக நாம் தான் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

யாரேனும் நீங்கள் மாறி விட்டிர்கள் என்றால், அவர்கள் எதிர்பார்த்தது போல நீங்கள் நடிப்பதை நிறுத்திவிட்டீர்கள் என்பதற்கான 95% வாய்ப்பு உள்ளது.

நம்முடன் சேர்ந்து வம்பு பேசுபவர் நம்மைப் பற்றியும் வம்பளப்பார் என்பதை மனதில் இருத்தவும்.

அமைதியான நபரே உரத்த சிந்தனை கொண்டவராக இருப்பார்.

எதிலும் ஒழுங்கு எதிர்ப்பார்ப்பவர்கள், தன்னை அதனால் வருத்திக் கொள்வதால், அதிக மன உளைச்சலுக்கு உள்ளாவர்.

முதலில் சூழ்நிலையை படிப்போம் பிறகு, நம்முடைய உணர்வுகளை சூழ்நிலையில் இருந்து பிரித்துப் பார்ப்போம். இப்போது அந்த புரிதலோடு நம்மால் நன்றாக செயல்பட முடியும்.

எது சொல்வதற்கு சரியான வார்த்தை, எது இல்லை என்று இப்போது உணர முடியும், அதற்கு முன் நம் உள்ளுணர்வு சொல்வதை கேட்போம். அது கிரீன் சிக்னல் காட்டினால் தொடரலாம். இல்லை என்றால் அது நமக்கு வேண்டாம்.

ஒருவர் நம்மை அவமானப்படுத்துவது போல உணர்கிறோமா? உண்மை அது தான் ஒருவருடன் பாதுகாப்பு உணர்வு பெறுகிறோமா? அவர் நம்பத் தகுந்தவர் தான். ஒருவருடைய ஆளுமைத் தன்மையையும் அவர் எதிர்செயல் ஆற்றுவதை மட்டுமே பார்க்க வேண்டாம். நம்முள் உள்ள உள்ளுணர்வு என்னவிதமான சக்தியை , அது நேரிடையா அல்லது எதிரிடையா எதைக் கொடுக்கிறது என்று பார்ப்போம், என்றுமே நம் உள்ளுணர்வு பொய்யே சொல்லாது.

நம் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டாம். அது எப்படி வெளியேறுகிறதோ அப்படியே இருக்கட்டும். அவற்றை வெளியேற்றும் வழிமுறைகள் பற்றி மட்டும் பயிலுவோம்.

தன்னை பகுத்தறிவாளனாக காட்டிக்கொள்ள உணர்வுகளைக் கட்டுப்படுத்துபவர்கள் பகுத்தறிவு தொலைத்தவர்கள் ஆகிறார்கள். அவர்கள் மற்றவரால் ஒதுக்கப்படுவார்கள்.

இப்படி நம் உணர்வுகள் எங்கு எப்படி அடிவாங்குகின்றன, சீறுகிறது. என்று ஆராயும்போது, அதை நமக்கு பயன் தரும் விதத்தில் மாற்ற முடியும். அப்படி செய்வோமேயானால் . நம் உணர்வுகளை எங்கு எப்போது வெளிப்படுத்தலாம் என்பதையும் அறிந்து கொள்வோம். அப்போது மட்டுமே அதை வெளிப்படுத்த வைப்போம்.

இதில் நாம் ஜெயிக்கும் போது, நாமே நம்முடைய புது அவதாரத்தை பார்ப்போம்!!



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கின் புதிய பிரதம செயலரை உடன் மாற்றவேண்டும் ஜனாதிபதி

## மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் கடிதம்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாண பிரதம செயலாளர் நியமனத்தில் உடனடியாக மாற்றம் செய்யுமாறு வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர், முன்னாள் முதலமைச்சர் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பத் தீர்மானித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்குப் புதிய பிரமத செயலாளராக சமன் பந்துலசேன ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி. கே. சிவஞானம் தலைமையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் உறுப்பி னர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போதே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

நேற்றைய கூட்டத்தில் 13 பேர் நேரில் சமூகமளித்து ஜனாதிபதிக்கு அனுப்பும் கடிதத்தில் ஒப்பமிட்டனர். 14 பேர் தொலைபேசி மூலமாக இந்தக் கடிதத்துக்கு ஆதரவைத் தெரிவித்தனர்.

நிர்வாக மொழியான தமிழ் மொழியைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் மக்களினதும் அதிகாரிகளினதும் தொடர்பாடல் கருதி இப் பதவிக்குப் பொருத்தமான தமிழ் அதிகாரிகளில் ஒரு வரை நியமித்து உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# விபத்துகளில் ஒரே நாளில் 8 பேர் சாவு!

நாட்டில் நேற்றுமுன்தினம் வெவ்வேறு இடங்களில் இடம் பெற்ற விபத்துக்களில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் மூவர் பாதசாரிகள் என்றும், மூவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் என்றும் அவர் கூறினார்.

மேலும், இருவர் ஓட்டோக்களில் பயணித்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பற்ற பயணம் மற்றும் கவன யீனம் காரணமாகவே அதிக விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கப்பம் கோரல் குழுவின் 4 உறுப்பினர்கள் கைது!

டுபாயிலிருந்து இயங்கும் கப்பம் கோரல் குழுவொன் றின் உறுப்பினர்கள் 4 பேர் பொலிஸாரால் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இந்தக் கப்பம் கோரும் குழுவின் பிரதானி டுபாய் நாட்டுக்குத் தப்பிச் சென்ற ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் 6 மனித கொலைக்குற்றச் சாட்டுக்கள் மற்றும் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக அவர் டுபாய் நாட்டுக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார்.

மேலும், அவர் களுத்துறை - எதன மடல பகுதியில், சிறைச்சாலை பஸ்ஸுக் குள் கொலை செய்யப்பட்ட ரணாலே சமயங் என்பவரின் உதவியாளர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனியார் நிறுவனம் ஒன்றில் கப்பம் பெறத் தயாராகவிருந்தமை தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கமைய குறித்த 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

## ஹிஷாலினி எமது இரத்தம்!

# கூப்பாடு போடும் 'மொட்டு' அணியினர் அறியவேண்டும் என்று மனோ பதிலடி

மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன், வேலுகுமார், உதயகுமார் ஆகிய எம்.பிக்கள், சிறுமி ஹிஷாலினி தொடர்பில் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறார்கள் எனக் கூசாமல் பொய் பேசும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி.டிலான் பெரேரா, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ஸ கட்சி எம்.பி. முஹமட் முஸம்பி ஆகிய அரச கட்சி அரசியல்வாதிகள், தங்கள் அரசு தோட்டத் தொழிலாளருக்கு இழைத்துள்ள அநீதியைக் கணக்கில் எடுக்கத் தவறுவதேன்?

-இவ்வாறு கேள்விஎழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

இந்த விவகாரம் பற்றி மனோ எம். பி. மேலும் கூறியதாவது:-

சிறுமி ஹிஷாலினி தொடர்பாக நாம் எம் கடமையைச் சிறப்பாகச் செய்துள்ளோம். தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம்,

(1) பொரளை நிலைய பொலிஸ் விசாரணை ஆய்வு

(2) பொலிஸ் தலைமையக விசாரணை மற்றும் விசேட பொலிஸ் குழுக்கள் ஆய்வு

(3) நாடாளுமன்றத்தில் உரை மற்றும் நேரடியாக பொலிஸ் துறை அமைச்சர் சரத் வீரசேகரவிடம் கேள்வி

(4).மலையகத்தில் நேரடி ஆர்ப்பாட்டங்கள்.

(5).சிங்கள மொழி ஊடக மாநாடுகள்

(6).சிங்கள தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகள்

ஆகியவற்றைச் செய்த பின்னர்தான், 'சிறுமி ஹிஷாலினி' விவகாரம் தேசிய அரங்கில் சூடுபிடித்தது என்பதை கூப்பாடு போடும் அரச அரசியல்வாதிகள் உணர வேண்டும்.

இது எமது கடமை. அதை தமிழ் முற்போக்குக் கூட்டணி எவருக்காகவும் கைவிடாது. ஹிஷாலினி எமது இரத்தம். எமது மக்களுக்காக நாம் வாய் திறந்து பேசாவிட்டால், யார் பேசுவது? நாம் போராடாவிட்டால், யார் போராடுவது? என்பதை நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள், நல்லுள்ளம் கொண்ட முஸ்லிம், சிங்கள மக்கள் உணர்ந்து கொண் டுள்ளார்கள்.

இன்று தோட்டத்தொழிலாளர் வறுமையில் வாடுகின்றனர். அவர்களது வருமானம் எமது நல்லாட்சியின் 2019ஆம் ஆண்டைவிட, இன்று வெகுவாகக் குறைந்து விட்டது. இதற்குக் காரணம், ஒருபுறம், ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கித் தருகின்றேன் என்று கூறிவிட்டு இந்த அரசு, வேலை நாள் எண்ணிக்கை மற்றும் கொழுந்து நிறை ஆகியவற்றைத் தீர்மானிக்கும் ஏகபோக உரிமையை நிறுவனங்களுக்கு வழங்கி விட்டு, சும்மா இருக்கின்றது. மறுபுறம், விலைவாசியோ பலமடங்கு உயர்ந்து விட்டது.

சிறுமி ஹிஷாலினி உட்பட தோட்டத் தொழிலாளர்களின், பிள்ளைகள் நகரப் பகுதிகளுக்குத் தொழில் தேடி வந்து ஆபத்தில் விழுவதற்கு பெருந்தோட்டத்துறையில் இன்று நிலவும் அதிமோச வறுமைதான் காரணம். இந்த அதிமோச வறுமைக்கு காரணம் என்ன? இந்த அரசின் தோட்டத்தொழிலாளர் தொடர்பான அக்கறையின்மை, அரசில் இருக்கின்ற இ.தொ.காவின் மௌனம் ஆகியவையே பிரதான காரணங்கள் என்பதை, இன்று சிறுமி ஹிஷாலினி பற்றி பொய்யாகக் கூப்பாடு போடும் எம்.பி. டிலான் பெரேரா, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, எம்.பி. முஹமட் முஸம்பில் போன்றவர்கள் உணர வேண்டும்.

இந்தப் பிரச்சினை தமிழ், முஸ்லிம், சிங்கள இனப்பிரச்சினை அல்ல. இது ஒரு சட்டம், ஒழுங்குப் பிரச்சினை என்று கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் இலங்கை நாடாளுமன்றத்தில், மிக நிதானமாகவும், மிகப் பொறுப்புடனும் தெளிவாகப் பலமுறை எடுத்துக் கூறிவிட்டேன்.

ஹிஷாலினி வீட்டுக்குச் சென்று மௌன அஞ்சலி செலுத்தியதைத் தவிர, அரசுக்கு உள்ளே இருக்கும் இ.தொ.கா., இந்தப் பிரச்சினை பற்றி கூறும்படியாக இதுவரை ஒன்றும் செய்யவில்லை. எதுவாயினும், இப்போது விசாரணை நடக்கின்றது. அதற்கு அனைவரும் கண்காணிப்புடன் கூடிய பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

இந்நிலையில், எம்மைப் பற்றி கூசாமல் பொய் பேசி குறை கூறும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. டிலான் பெரேரா, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ஸ கட்சி எம்.பி. முஹமட் முஸம்பில் ஆகிய அரச அரசியல்வாதிகள், தங்கள் அரசு தோட்டத் தொழிலாளருக்கு இழைத்துள்ள அநீதியைக் கணக்கில் எடுக்கத் தவறுவதேன்?

நாம் எமது ஆட்சியில் துண்டு



விழும் மேலதிக 50 ரூபாவைத் தரத் தவறிவிட்டோம் எனக் குற்றஞ்சாட்டிய இவர்கள் தோட்டத்தொழிலாளருக்கு இவர்களின் ஆட்சியில் இன்று என்ன செய்துள்ளார்கள்?

ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா சம்பளம் தருகின்றோம் என்று கூறிவிட்டு, வேலை நாள் எண்ணிக்கை மற்றும் கொழுந்து நிறை ஆகியவற்றை தீர்மானிக்கும் ஏகபோக உரிமையை நிறுவனங்களுக்கு வழங்கி விட்டு, இந்த அரசு சும்மா இருக்கின்றது. மறுபுறம், விலைவாசியோ பலமடங்கு உயர்ந்து விட்டது. ஆகவே, பத்து நாள் வேலையும், குறைந்த வருமானமும் தோட்டத் தொழிலாளரை வாட்டுகின்றது. வறுமை பெருந்தோட்டத் துறையில் தாண்டவமாடுகின்றது.

இதுவே இன்று சிறுமி ஹிஷாலினி உட் பட கணிசமான பெருந்தோட்டத் துறை பிள்ளைகள், பெண்கள், ஆண்கள் நகரப் பகுதிகளுக்கு தொழில் தேடி வர பிரதான காரணம்.

வறுமை எல்லோருக்கும் பொதுவானதுதான். அதனால்தான், இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்கள் தொழில் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று சொல்லொணாத் துன்பங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். இப்படிதான், மூதூரைச் சேர்ந்த ஏழை முஸ்லிம் சிறுமி ரிசானா நபீக், சவுதி அரேபியா சென்று அங்கே கொல்லப்பட்டார்.

ஆனால், பெருந்தோட்டத்துறையில், இன்று ஏற்பட்டுள்ள நிலைமை, 1970 களில் அன்றைய ஸ்ரீமாவோ பண்டார நாயக்க ஆட்சிக்கால நிலைமையை நெருங்கிக் கொண்டு இருக்கின்றது என்பதை இந்த அறிவு கெட்ட அமைச்சர்கள் அறிந்துகொள்ள வேண்டும். எதிரணியில் இருக்கும் எம்மை பொய்யாகக் குறை கூறுவதை விட்டு, இவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் ஆவன செய்ய வேண்டும் - என்றார்.

# இலங்கையின் வடக்கு - கிழக்கு மறைமாவட்டங்கள் இணைந்து தனியான ஆயர் மன்றம் ஒன்று உருவாகுவது காலத்தின் கட்டாயம்

## மொன்றியல், கனடாவில் இருந்து ஒரு குரல்

**"தாயகத்தின் வன்னிப் பெரு நிலப்பரப்பில் முல்லைத்தீவு எனது பிறப்பிடமாயினும் நான் கடந்த 1984ஆம் ஆண்டு முதல் புலம் பெயர்ந்து கனடா மொன்றியல் மாநகரில் வசிப்பதனால் எனது வாழ்வின் பெரும் பகுதியைக் குறிப்பாக 35 ஆண்டுகளுக்கு மேலாகப் புலம்பெயர்ந்தவனே. கத்தோலிக்கத் திரு அவையோடு இணைந்த ஒரு பொதுநிலையினன் என்ற ரீதியில் இலங்கையின் வடக்கு - கிழக்கு மறை மாவட்டங்கள் இணைந்த ஆயர் மன்றம் ஒன்று உருவாகுவதைப் பெரிதும் வரவேற்கிறேன்" - என அல்பிரட் ஞானராஜா சூசை முத்து, மொன்றியல், கனடாவில் இருந்து தெரிவிக்கிறார்.**



இப்படம் மொன்றியல் கனடாவில் எடுக்கப்பட்டது. படத்தில் முதலாவதாக நிற்பவர் கட்டுரை ஆசிரியர் அல்பிரட் ஞானராஜா சூசைமுத்து. அடுத்து நிற்பவர் முன்னாள் மொன்றியல் ஆன்மிகப் பணியக இயக்குனர் யூட் அமலதாஜ் அடிகள்.அடுத்து நிற்பது யாழ் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை. இறுதியாக நிற்பவர் கட்டுரை ஆசிரியர் அல்பிரட் ஞானராஜா சூசைமுத்து அவர்களின் துணைவியார்.

- அல்பிரட் ஞானராஜா சூசைமுத்து-
(மொன்றியல் கனடா)

### தமிழ்க் கத்தோலிக்க மறைமாவட்டங்களை இணைத்த ஒரு ஆயர் மன்றம் ஏன் அவசியம்?

சிங்களக் கத்தோலிக்க மக்களையும் தமிழ்க் கத்தோலிக்க மக்களையும் இணைக்கின்ற ஒரு பெரும் பாலமாக இலங்கையில் கத்தோலிக்க மதம் செயல்படுவதனால் கடந்த 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த நாள்களுக்கு முன்பிருந்தே அரசியலில் மட்டுமல்ல இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது பல்வேறு செயற்பாடுகளில் கத்தோலிக்க ஆயர் பேரவை எனப்படும் இந்த திரு அவையின் பங்களிப்பு முக்கியமானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை என்பது எனது பணிவான அபிப்பிராயம்.

எனினும் இலங்கையில் இந்து மதத்திற்கோ பௌத்த மதத்திற்கோ கிடைக்காத மிகப்பெரும் இவ்வரிய வாய்ப்பினைக் கத்தோலிக்க திருச்சபையின் சிங்கள மற்றும் தமிழ் ஆயர்களைக் கொண்ட தலைமைப் பீடமான இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையை உரிய வகையில் பயன்படுத்தி இலங்கையில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் கொண்டு வந்துள்ளதா எனப்படும் வினாவோடு இலங்கையின் வட கிழக்கு தமிழ்க் கத்தோலிக்க மறைமாவட்டங்களை இணைத்த ஓர் ஆயர் மன்றம் ஏன் உருவாக்கப்பட வேண்டும் எனப்படும் எனது பணிவான கருத்தினைப் பதிவு செய்கிறேன்.

தாயகத்தின் வன்னிப் பெரு நிலப்பரப்பில் முல்லைத் தீவு எனது பிறப்பிடமாயினும் நான் கடந்த 1984ஆம் ஆண்டு முதல் புலம்பெயர்ந்து கனடா மொன்றியல் மாநகரில் வசிப்பதனால் எனது வாழ்வின் பெரும் பகுதியைக் குறிப்பாக 35 ஆண்டுகளுக்கு மேலாக புலம்பெயர்ந்ததாக கத்தோலிக்கத் திரு அவையோடு இணைந்த ஒரு பொதுநிலையினன் என்ற ரீதியில் இலங்கையின் வட - கிழக்கு மறைமாவட்டங்கள் இணைந்த ஆயர் மன்றம் ஒன்று உருவாகுவதைப் பெரிதும் வரவேற்கிறேன்.

கடந்த காலங்களில் இலங்கையிலுள்ள வட - கிழக்கு தமிழ் ஆயர்கள் தமிழ் மக்களுக்குச் சார்பாக என்ன கதைத்தாலும் அல்லது கதைப்பவர்கள் தமிழ் ஆயர்களாகவே இருப்பதனால் அவர்கள் பேசுவதெல்லாம் அரசியலாகவே கருதப்பட்டுப் புறக்கணிக்கப் பட்டதனால் தமிழ்க் கத்தோலிக்க திருச்சபையின் வடக்கு - கிழக்கு தமிழ் ஆயர்கள் பிரச்சினை வேண்டாம் என்று அமைதி காத்து வருகின்றனரா எனவும் எனக்குள்ளே பல வினாக்கள் எழுகின்றன.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சிங்கள ஆயர்கள் குரல் எழுப்பிய போது அது மனிதாபிமானத்தின் குரலெனப்பட்டது

கடந்த 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சிங்கள ஆயர்கள் குரல் எழுப்பிய போது அதனை மனிதாபிமானத்தின் குரலெனப்பட்டது. ஆயினும், முப்பது ஆண்டு கால யுத்தத்தில் குண்டுத் தாக்குதல்களால் வட கிழக்குப் பகுதிகளில் பல ஆலயங்கள் சேதமாக்கப்பட்டு எட்டுக்கு மேற்பட்ட தமிழ்க் கத்தோலிக்கக் குருக்கள் கொல்லப்பட்டதோடு ஒரு லட்சம் அளவிலான பொது மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக இலங்கை தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபை என்ன பேசினாலும் அது அரசியலாகவே கருதப்படுகிறது.

ஒரு மறைமாவட்டம் கத்தோலிக்கத் திரு அவையின் பல பங்குத்தளங்களை உள்ளடக்கிய ஒரு ஆயரின் ஆட்சியின் எல்லைப் பகுதியைக் குறிப்பிட்டாலும் பல்வேறு பங்குத்தளங்கள் கொண்ட மறைமாவட்டம் ஓர் ஆயரால் ஆட்சி செய்யப்படுவது போல பல மறைமாவட்டங்கள் ஓர் உயர் மறைமாவட்டத்தின் கீழ் காலம் காலமாக இருப்பது நடைமுறையிலுள்ளது. இத்தகைய உயர் மறைமாவட்டத்தின் ஆயர் பேராயர் என அழைக்கப்படுவார். இவ்வகையான ஒரு மறைமாவட்டத்தை நிறுவும் உரிமை திருத்தந்தைக்கே உரியது.

கத்தோலிக்க மறைமாவட்டம் என்பது மேய்ப்புப் பணிக்காக ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களதும் குருக்களதும் கூட்டமாக விவரிக்கப்பட்டாலும், ஒரு கத்தோலிக்க மறைமாவட்டத்தில் வாழும் அனைத்து கத்தோலிக்க மக்களையும் உள்ளடக்கியுள்ளதாயினும், பயனுள்ளதாயின் விசுவாசிகளின் வழிபாட்டு முறையால் வேறுபட்டுள்ள மறைமாவட்டங்கள் பல ஒரே எல்லைக்குள் திருத்தந்தையால் நிறுவப்படலாம் எனப்படுவது அன்னையாம் திரு அவையின் பல்லாண்டு கால மரபுவழிச் செயலாக இருக்கிறது.

### ஆரம்பத்தில் யாழ். மறை மாவட்டம்

இலங்கையில் யாழ்ப்பாணம் மறைமாவட்டம் 1845 பெப்ரவரி 17ஆம் நாள் நிறுவப்பட்டு யாழ்ப்பாணம் மறைமாவட்டம் என்ற பெயரோடு கடந்த 1886 செப்ரெம்பர் 1 இல் மறைமாவட்டம் என்ற நிலைக்கு உயர்த்தப் பட்டது. தொடர்ந்து யாழ்ப்பாணம் மறைமாவட்டம் 1893 ஆகஸ்ட் 25ஆம் நாள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம் உருவானது வரலாறு.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

கடந்த 1975 டிசெம்பர் 19ஆம் நாள் யாழ் மறைமாவட்டத்தின் சில பகுதிகள் பிரிக்கப்பட்டு புதிதாக அனுராதபுரம் மறைமாவட்டம் உருவாக்கப்பட்டது.

பின்னர் 1981 ஜனவரி 24ஆம் நாள் மன்னார் மறைமாவட்டம் உருவாக்கப்பட்ட போது யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் சில பகுதிகள் அப்புதிய மறைமாவட்டத்தின் பகுதிகளானமை நாம் அறியாததல்ல.

கத்தோலிக்க திரு அவையின் இந்த நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் வடக்கு - கிழக்கு மாகாண குருக்கள் துறவிகள் மற்றும் பொதுநிலையினரை உள்ளடக்கிய யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை என நான்கு மறைமாவட்டங்களாகி தமிழ் ஆயர்களை கொண்டிருப்பது மட்டுமல்ல வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அரசியல் நிர்வாக எல்லைகளைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளன.

பரிசுத்த திருத்தந்தையின் அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை எனப்படும் நான்கு மறைமாவட்டங்களையும் எந்த அரசு நினைத்தாலும் மாற்ற முடியாது.

### கிளிநொச்சி, முல்லை மவட்டங்களை இணைத்து ஒரு புதிய மறைமாவட்டம்

எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை இணைந்து வன்னி மறைமாவட்டம் என ஒரு புதிய மறைமாவட்டத்தை உருவாக்க வேண்டும் என காலத்துக்குக் காலம் எனது பிறப்பிடமான வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து கருத்துக்கள் வருவதை யாரும் அறியாததல்ல.

வன்னி பெருநிலப்பரப்பை ஒரு தனி மறைமாவட்டமாகப் பிரகடனப்படுத்தி வடக்கு, கிழக்கில் ஐந்தாவது தமிழ் மறைமாவட்டத்தையும் உருவாக்கிய பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைத்து தனியான ஒரு தமிழ் மறைமாநிலத்திற்கென பேராயர் ஒருவரையும் ஏன் நியமிக்கக்கூடாது? எனப்படும் கேள்வி சிறியவனான எனக்குள் எழுகிறது.

எனினும் தமிழர்களின் பாரம்பரியங்களையும் அடையாளங்களையும் மாற்றி அமைக்கும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் இக்காலத்தில் வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் இலங்கை அரசுக்கு சவாலாக அமையாவிடினும், வடக்கு - கிழக்கு இணைந்த ஆயர் மன்றம் ஒன்று உருவாவதனை தடுப்பதற்காக பல மறைமுக செயற்பாடுகளுக்கான வாய்ப்புகளும் உள்ளதனை நாம் மறுக்க முடியாது.

வட கிழக்கு ஆயர் மன்றம் பரிசுத்த தந்தைக்கோ அல்லது சிங்கள ஆயர்களுக்கோ அல்லது இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவைக்கோ எதிரானதல்ல எனும் உணர்வோடு இலங்கை வாழ் தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களின் தனித்துவத்தைப் பேணும் வடக்கு - கிழக்கு ஆயர் மன்றம் ஒன்று உருவாவதனை புலம்பெயர் பொதுநிலையினன் என்ற நிலையில் நான் பெரிதும் வரவேற்கிறேன்.

# வாக்களிக்கத் தகுதி இல்லாதவர்களுக்கு வாழ்க்கையை முடிவெடுக்கத் தகுதியா?

பஸ்றி ஸீ.ஹனியா
LL.B (Jaffna)

**சட்டம் ஒரு வெளிச்ச அறை**



பன்னிரெண்டு வயதே நிரம்பிய ஒரு சிறுமி கற்பமான நிலை யில் தன் பிரசவத்துக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதை ஏற்றுக்கொள்ள முடிகின்றதா? இதில் எவ்விதமான சட்ட எதிர்ப்புக்களும் கிடையா; சட்டம் அங்கீகரித்த நடைமுறையே இது என்பதை சரி என ஏற்றுக்கொள்ள முடிகின்றதா?

எந்தவொரு சட்டத்தாலும் சவால்விட முடியாத நாட்டின் யாப்பின் சரத்து 16 (1) நடைமுறையில் இருக்கும் முஸ்லிம் திருமண விவாக, விவாகரத்துச் சட்டமே இதனைக் கூறுகின்றது.

முஸ்லிம் திருமணம் மற்றும் விவா கரத்துச் சட்டம் (MMDA) தொடர்பான விவாதத்தில் ஒன்றுதான் முஸ்லிம்களுக்கான திருமணத்தின் குறைந்தபட்ச வயதை அதிகரிப்பது தொடர்பானது. 1995 ஆம் ஆண்டில் சட்ட சீர்திருத்தங்கள் முஸ்லிம்களைத் தவிர அனைத்து குடிமக்களுக்கும் குறைந்தபட்ச திருமண வயதை 18 ஆண்டுகளாக உயர்த்தினாலும், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் திருமண வயதை நிர்ணயிக்கவில்லை.

பிரபலமான நம்பிக்கைக்கு மாறாக, முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் ஒரு முஸ்லிம் பெண் அல்லது ஆண் திருமணம் செய்து கொள்ளக்கூடிய குறைந்தபட்ச வயது 12 ஆண்டுகள் அல்ல சட்டத்தின் பிரிவு 23இன் படி, 12 வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணை ஒரு குவாசி நீதிபதியின் அங்கீகாரத்துடன் திருமணத்தில் கொடுக்க முடியும்.



தற்போது விவாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் சிக்கலான விதிகளில், குறைந்தபட்ச வயதை நிர்ணயிப்பது குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் பழைமைவாத கூறுகளிலிருந்து எதிர்ப்பைச் சந்தித்துள்ளது. முஸ்லிம் சமூகத்தினரிடமிருந்து இங்கு இரண்டு கருத்துக்கள் உள்ளன. ஒன்று, முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் குறைந்தபட்ச திருமண வயதை நிர்ணயிக்க வேண்டுமா? இல்லையா? என்பது. இரண்டு, திருமணத்தில் குறைந்தபட்ச வயது என்றால் அதை எந்த வயதுக்கு உயர்த்த வேண்டும்? என்பது.

முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்துக்கு ஆதரவாக இல்லாதவர்கள் குறைந்தபட்ச திருமண வயதை நிர்ணயிக்கிறார்கள். பெரும்பாலும் மத உரை மற்றும் ஹதீஸ் (நபிகள் நாயகத்தின் நடைமுறைகள்) ஆகியவற்றின் மத விளக்கங்கள் (தவறான விளக்கங்கள்) அடிப்படையில் காரணங்களைத் தருகின்றார்கள்.

இள வயதிலேயே திருமணமான பின்னர் இளம் முஸ்லிம் மணப்பெண்கள் கைவிடப்பட்ட, விவாகரத்துச் செய்யப்பட்ட அல்லது பலதாரமண உறவுகளுக்கு தள்ளப்பட்ட பல வழக்குகளுக்குச் சான்றாக – சட்டரீதியாக இருக்கின்றது. குழந்தை திருமணம் ஒரு விதத்திலும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்காது.

நவீன காலங்களுக்கு ஏற்ப நிலையான குறைந்த பட்ச வயதை நிர்ணயிக்க வேண்டிய அவசியத்தை இலங்கை போன்ற நாடுகள் உணர்ந்த போதிலும் சிறு வயது திருமணத்தை அனுமதிப்பதற்கான காரணம் என்ன ?

சட்டப் பாதுகாப்புகள் குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வியைக் குறைந்த பட்சம் இரண்டாம் நிலை வரை முடிக்க வாய்ப்புகளை வழங்குகின்றன. இது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வாழ்க்கை மற்றும் திருமணத்தின் பொறுப்புகள் மற்றும் விளைவுகளுக்கு அவசியமான முதிர்ச்சியை உறுதி செய்யும்.

கல்வி, சுகாதாரம் மற்றும் வேலை வாய்ப்புக்கான உரிமைகளில் குழந்தை திருமணத்தின் மறுக்க முடியாத தாக்கத்தை ஆவணப்படுத்தும் ஏராளமான ஆராய்ச்சிகளும் உள்ளன. இள வயது திருமணங்கள் இயற்கையாகவே பெண்களை வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்குகின்றன. சமூக அழுத்தம், சார்பு, நிதி இல்லாமை மற்றும் மேலும் ஆபத்து போன்ற பல்வேறு காரணங்களால் உதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட வழிகள் உள்ளன. இவை பெண்ணின் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் பங்கேற்பதைத் தடுக்கின்றது.

குழந்தைகளைப் பாதுகாப்போம் என்ற பெயரில் அவர்களது எதிர்காலத்தை அளிப்பது எவ்விதத்தில் நியாயமானதாகும்?

குழந்தைத் திருமணங்களுக்குத் தெளிவான சான்றுகள் இருந்தபோதிலும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

கலாசாரம், மரபுகள் மற்றும் மத சுதந்திரத்தை அனுபவிக்க அனைத்துக் குடிமக்களின் உரிமைகளையும் இலங்கை அரசு மற்றும் தலைவர்கள் அங்கீகரித்துப் பாது காப்பது முக்கியம். அதேபோல், கலாசாரம் மற்றும் மதம் என்ற பெயரில் குழந்தை உரிமைகள் சமரசம் செய்யப்படாமல் பார்த் துக்கொள்வது அரசின் பொறுப்பாகும்.

வாக்களிக்கத் தகவல் அறிந்த முடிவை எடுக்க அனைத்து குடிமக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வயது இருக்க வேண்டும் என்ற விதிமுறையை நிர்ணயிக்கும் நாடு என்றால், அதே தர்க்கம் திருமணத்தின் குறைந்த பட்ச வயதுக்கும் பொருந்த வேண்டும்.

18 வயதுக்கு முன்னர் திருமணம் செய்து கொள்ளும் இளம் பருவத்தினர் மற்றும் குழந்தைகள் அவர்களின் உடல்நலம், கல்வி மற்றும் நல்வாழ்வுக்குத் தீங்கு விளைவிப்பதாக அரசு தீர்மானித்தால், அவர்கள் எந்த இன அல்லது மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் நாட்டின் அனைத்து குழந்தைகளுக்கும் இது பொருந்தும். இலங்கை முஸ்லிம் பெண்கள் முந்தைய வயதிலேயே திருமணத்துக்குத் தயாராகும் ‘சிறப்பு’ இனப்பெருக்க முறையுடன் பிறக்கவில்லை.

முஸ்லிம் குழந்தைகளுக்கு அரசால் நடத்தப்படுவதில் வெளிப்படையான வேறுபாடு உள்ளது. இது பல தசாப்தங்களாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளால் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டாலும் அவர்களின் அவல நிலை குறித்து தொடர்ந்து அலட்சியமாக உள்ளது.

> “வாக்களிக்கத் தகவல் அறிந்த முடிவை எடுக்க அனைத்து குடிமக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வயது இருக்க வேண்டும் என்ற விதிமுறையை நிர்ணயிக்கும் நாடு என்றால், அதே தர்க்கம் திருமணத்தின் குறைந்த பட்ச வயதுக்கும் பொருந்த வேண்டும்.”

முஸ்லிம் சிறுமிகளும் சிறுவர்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்பதை உணரத் தவறியது ஏற்றுக்கொள்ள முடியாதது. அவர்கள் சமத்துவத்துக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் தகுதியானவர்கள். இலங்கையின் முஸ்லிம் குழந்தைகளுக்கு எதிரான இந்தப் பாகுபாடு ஒரு நாளாவது முடிவடைய வேண்டும்.

அவ்வாறு முடிவடைய வேண்டும் என்றால், அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கப்பட வேண்டும். நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன இல்லை என்று கூறமுடியாது. ஆனால், அதற்கான ஆதரவுதான் கிடைக்கவில்லை.

சட்டம் என்பது காலம் அல்ல இயற்கையாகவே மாறிச் செல்வதற்கு அது உருவாக்கப்பட்டது. ஆகவே, சட்டம் மாற்றப்பட வேண்டும்.

# தமிழக முகாம்களிலுள்ள இலங்கை தமிழர் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும்

## முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்து



தமிழக முகாம்களிலுள்ள இலங்கை தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கூட்டத்தில் மு.க.ஸ்டாலின் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண தனி வழிகாட்டுதல் குழுவொன்றை அமைக்க வேண்டும்.

மேலும் முகாம் வாழ் தமிழர்களுக்கு குடிதண்ணீர், குடியிருப்பு, கழிவறை வசதி, மாதாந்திர பணக் கொடையை உயர்த்தி வழங்குதல், தெருவிளக்கு மற்றும்மின்வசதி, இலவசஎரிவாயு இணைப்பு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இதேவேளை வெளிநாட்டு வாழ் தமிழர்களின் அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்தை மேப்படுத்த வெளிநாட்டு வாழ் தமிழர்கள் நலத்துறை என்ற புதிய துறையை உருவாக்குதல் வேண்டும்.

அத்துடன் அவர்களின் குழந்தைகளுக்கு இணையவழி ஊடாக தமிழைக் கற்பிப்பதற்குத் தமிழ் இணையக் கல்விக் கழகம் அமைப்பது உள்ளிட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக் கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.
சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியானபதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

1. 1 தொடக்கம் 100 வரையுள்ள சகல எண்களையும் எழுதினால் அதில் 5 என்ற எண் எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை ?

2. 2019 ஆம் ஆண்டை எவ்வாண்டாக ஐ.நா. சபை அறிவித்தது?

3. குறித்த ஒரு லீப் வருடத்தில் முதலாம் நாள் வெள்ளிக்கிழமை எனில் அவ்வருடத்தின் இறுதி நாள் என்ன கிழமையாகும்?

4. ராஜா என்பவர் 3 Kg, 21 ரூபா படி குறித்தளவு மாம்பழங்களை வாங்கி 5Kg, 50 ரூபாவுக்கு விற்பனை செய்தார். இதன் மூலம் ரூபா 102 இனை இலாபமாகப் பெற்றார், அவர் எத்தனை Kg மாம்பழங்களை விற்றார்?

5. 2017 நவம்பர் இந்தியா மற்றும் இலங்கையை தாக்கிய புயலின் பெயர் என்ன ?

6. 4 நாள்கள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் எந்த அணிகளுக்கிடையில் முதலாவதாக நடைபெற்றது?

7. $30ms^{-1}$ வேகத்தில் பயணிக்கும் 30 மீற்றர் நீளமான ரயில் 30m நீளமான பாலத்தை முற்றாக கடக்க எத்தனை செக்கன் தேவை ?

8. அதிக மக்கள் அடர்த்தியை கொண்ட கண்டம் எது?

9. மீன்கள் இல்லாத ஆறு?

10. 'புதியதோர் உலகம் செய்வோம்' என பாடியவர் யார்?

பெயர் :- ..............................................
முகவரி :- ..............................................
தொலைபேசி இலக்கம்:- ....................
அடையாள அட்டை:- ........................
மின்னஞ்சல் முகவரி:- ........................

## 18.07.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

01. 600 மீற்றர்
02. ஆனி 32
03. 2250 மீற்றர்
04. 02 காலைப்பதிப்பு
மாலைப்பதிப்பு
05. ஞானபீட விருது
06. வொஷிங்டன்
07. மெலானின் என்னும் நிறப்பொருள்
08. இலங்கை
09. ஆபிரகாம் லிங்கன்
10. பாரதியார்

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

01. ஆர். மாலதி - உடுப்பிட்டி - 10 சரி
02. ஏ.துஷான் - நீர்வேலி - 09 சரி
03. எஸ். சதுர்ஜினி - அல்வாய் - 09 சரி
04. த. சராதரன் - குப்பிளான் - 06 சரி
05. கே. அனுசன் - ஏழாலை - 09 சரி
06. உ. ஜாமளை - கொழும்பு - 08சரி

# ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதிகோரி கிளிநொச்சியிலும் போராட்டம் நடந்தது

கிளிநொச்சியில் ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி போராட்டமொன்று நேற்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி - பாரதிபுரம், சூசைபிள்ளை கடைச் சந்தியில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்கள், 'பள்ளி செல்ல வேண்டிய ஒரு பாலகியை உன் வீட்டில் வேலைக்கு வைத்துவிட்டு நல்லாட்சி செய்தாயோ?', 'அரசே சிறுமியின் சாவுக்கு தீர்வு எங்கே?', 'யாராக இருந்தாலும் நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டும்', 'பெண் அடிமையின் உச்சம் ஒரு பாலகியின் மரணம்' உள்ளிட்ட கோஷங்களை எழுப்பி, பதாதைகளை ஏந்திப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம் ஆகிய கிராம மட்ட பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த குறித்த போராட்டத்தில் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பஸிலின் நாடாளுமன்ற வருகை சட்டவிரோதமானதல்ல - ரணில்

பஸில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற வருகை சட்டவிரோதமானதல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சட்ட வல்லுனர்கள் இதை தெரிவித்துள்ள நிலையில் அவரது உறுப்புரிமையை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றம் செல்ல முடியாது என்றும் கூறினார்.

நாட்டில் தேசியப் பொருளாதாரம், ஜனநாயகக் கொள்கை ஆகியவை பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில் நாட்டின் எதிர்காலம் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு குடும்ப ஆட்சி தொடர்ந்தால் நாட்டு மக்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.


## மணமகள் தேவை

கனடாவில் வாழும் 36 வயது 12இல் செவ்வாயுள்ள வெள்ளாளர் குல மணமகனுக்கும் பிரான்சில் வாழும் 38 வயது செல்வாய் குற்றமற்ற வெள்ளாளர் குல மணமகனுக்கும் படித்த அழகிய மணமகளை இலங்கையில் தேடுகிறோம்

தொடர்புகளுக்கு - www.sorkham.com
001416661855
021 222 1515
077 6505097



## மாங்கல்யா

லக்ஷ்மி நாராயணா திருமண சேவை
இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
077 197 1667
077 316 4796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1991. 4.11 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சதயம் 2
கி.பா - 4 செவ் - 03 இல்
தகைமை - Bsc, Msc PhdD
தொழில் - Compay Work
எதிர்பார்ப்பு - வெளிநாடு PR உள்ள மணமகள் (பட்டதாரி)

பிறந்த திகதி - 1987.01.07 மதம் - இந்து
ஜாதி - ஆண் K நட்சத்திரம் - ரேவதி
கி.பா - 65 செவ் - 8 இல்
தகைமை - HNDA B.Com
தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - G.C.E.A/ L மேல்படித்த மணமகள்.

பிறந்த திகதி - 1992.09.04 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை 4
கி.பா - 15 செவ் - 2 இல்
தகைமை - G.C.E A/L
தொழில் - Company
எதிர்பார்ப்பு - G.C.E A/L படித்த மணமகள் தேவை.
(காரைநகர் முன்னுரிமை)

பிறந்த திகதி - 1990.06.30 மதம் - இந்து
ஜாதி - ஆண் V நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 50 செவ் - 10இல்
தகைமை - CIMA
தொழில் - Company
எதிர்பார்ப்பு - படித்த மணமகள் (காரைநகர் முன்னுரிமை)

பிறந்த திகதி - 1988.09.23 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அவிட்டம் 4
கி.பா - 35 செவ் - 3இல்
தகைமை - HNDE தொழில் - சொந்த நிறுவனம்
எதிர்பார்ப்பு - படித்த மணமகள் தேவை

பிறந்த திகதி - 1987.01.03 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அவிட்டம் 4
கி.பா - 11 செவ் - 9 இல்
தகைமை -G.C.E A/L தொழில் - பிரான்ஸ் PR
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்.

பிறந்த திகதி - 1985 07.02 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மூலம் 3
கி.பா - 39 செவ் - சூரி 1
தகைமை - Business Management
தொழில் - சொந்த தொழில்
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்.

பிறந்த திகதி - 1988.08.21 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுசம்
கி.பா - 48 செவ் - 7இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor

### மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1991.04.16 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 22 செவ் - 2இல்
தகைமை -MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor OR Engineer

பிறந்த திகதி - 1991.09.08 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை
கி.பா - 18 செவ் - சூரி 10 இல்
தகைமை - B. Com தொழில் - Company
எதிர்பார்ப்பு - ஆஸ்திரேலியா, கனடா, சிங்கப்பூர்

பிறந்த திகதி - 1990.12.08 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 24 செவ் - 8இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor OR Engineer

பிறந்த திகதி - 1988.11.12 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தராடம்
கி.பா - 30 செவ் - 6இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1990.12.24 மதம் - இந்து
ஜாதி - பெண் இசைவேளாளர் நட்சத்திரம் - பூரட்டாதி 3
கி.பா - 34 செவ் - 6 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor OR Eng மணமகன் தேவை.

பிறந்த திகதி - 08.09.1993 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 34 செவ் - 9இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor OR Eng மணமகன் தேவை.

பிறந்த திகதி - 28.06.1989 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 23 செ - 11 இல்
தகைமை - M.B.B.S.
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன் தேவை

பிறந்த திகதி - 1985.08.07 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 35 செவ் - சூரி
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மண மகன் தேவை.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

# ஸ்ரீ ரெஜித் குமார்

# ஒரு ஆன்மீகப் பயணி

இந்தியாவின் கேரளா திருச்சூரில் உள்ள ஸ்ரீ ரெஜித் குமார் அவர்கள் ஒரு ஆன்மீகவாதி, குணப்படுத்துபவர், புவிசார்பாளர் மற்றும் ஒரு ஆன்மீகப் பயணி ஆவார். மக்களை குணப்படுத்துவது மட்டுமல்லாமல் இல்லங்கள் மற்றும் பணியிடங்களின் ஆற்றல்களை நேரடியாகவும் தொலைவில் இருந்தும் சமநிலைப்படுத்தும் திறன் கொண்டவர். அவர் தனது திறன்களின் மூலம் உலகெங்கிலும் உள்ள பல மக்களுக்கு பயனளித்துள்ளார். அவர் அத்திறன்களை அவரின் ஆன்மீக வழிகாட்டிகளிடமிருந்து ஆசீர்வாதமாகப் பெற்று, இவ்வாறாக மனித குலத்திற்கு சேவை செய்யவேண்டும் என்று அவர்களால் வழிகாட்டப்பட்டார். அவரின் இந்த ஆன்மீக தேடலில், மறைந்த கண்டமான லெமூரியா அல்லது குமரிக்கண்டம் தொடர்புடைய பல்வேறு ஆற்றல் புள்ளிகளுக்கு பயணம் செய்யுமாறு வழி நடத்தப்பட்டார்.

'குமரிக் கண்டம்' என்ற சொற்கள் முதலில் கந்த புராணத்தில் அறியப்பட்டது. கந்தபுராணம் ஸ்கந்த புராணத்தின் தமிழ் பதிப்பாக, காஞ்சிபுரத்தின் குமரக் கோட்டத்தில் ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்களால் எழுதப்பட்டது. கந்தபுராணத்தின் 'அந்தகோசம் படலம்' பிரபஞ்சத்தின் அண்டவியல் மாதிரியை பின்வருமாறு விவரிக்கிறது: அதில் பல உலகங்கள் உள்ளன, அவை ஒவ்வொன்றும் பல கண்டங்களைக் கொண்டிருக்கின்றன, ஒவ்வொரு கண்டமும் பல ராஜ்யங்களைக் கொண்டிருந்தன. அத்தகைய ஒரு ராஜ்ஜியத்தின் ஆட்சியாளரான பரத மன்னனுக்கு எட்டு மகன்களும் ஒரு மகளும் இருந்தனர். அவர் தனது ராஜ்யத்தை ஒன்பது பகுதிகளாகப் பிரித்தார், மேலும் அவரது மகள் குமாரி ஆட்சி செய்த



ஜப்பானில் டோக்கியோவில் ஃபுஷிமி இனாரி கோவிலில் ஸ்ரீ ரெஜித் குமார்

ராஜ்ஜியம் அவருக்குப்பின் குமரிக்கண்டம் என்று அறியப்படுகிறது. இங்கு குமரிக்கண்டம் 'பூமியின் ராஜ்ஜியம்' என்று விவரிக்கப்படுகிறது. புலவர் நக்கீரர் தமிழிலக்கிய படைப்பான இறையனார் அகப்பொருள் என்ற நூலுக்கு எழுதிய வருணனையில் குமரிக் கண்டம் காலத்தில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்ததற்கான தகவல்கள் அறியப்படுகிறது. அச்சங்கங்களில் தமிழ் மொழியைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்த மற்றும் பல இலக்கியப் படைப்புகளை உருவாக்கிய தமிழ் அறிஞர்கள் மற்றும் கவிஞர்கள் இருந்தனர். அவர்கள் குமரிக்கண்டத்தை தமிழ் நாகரிகத்தின் தொட்டிலாகக் கருதினர்.

ஸ்ரீ ரெஜித் குமார் அவர்கள் கனவுகளின் மூலம் உள்ளுணர்வின் வாயிலாக பல்வேறு நாடுகளில் உள்ள பல ஆற்றல் புள்ளிகளுக்கு செல்ல வழி நடத்தப்பட்டதாக கூறுகிறார். இவை அந்தக் குறிப்பிட்ட இடங்களை அடையாளம் காண்பதற்குத் தேவையான தடயங்களை அவருக்கு வழங்கும். அவற்றில் சில – ரஷ்யா, சீனா, தாய்லாந்து மெக் ரிச்சி நீர்த்தேக்கம் (சிங்கப்பூர்), ப்ளூ மௌடண்ஸ், லயன் ஐலண்ட் (ஆஸ்திரேலியா), டிராகன் ஹில் மற்றும் சில்பரி ஹில்ஸ் (U.K), பிளேய்ன் டி சேபிள்ஸ் மற்றும் பிட்டான் டி லா ஃபோர்னேஸ் (ரியூனியன் ஐலண்ட்), கம்ரின் கிஹித் மடாலயம் (மங்கோலியா), ஃபுஷிமி இனாரி கோவில் (ஜப்பான்), கதிர்காமம் (இலங்கை) இ டைகர் நெஸ்ட் (பூட்டான்), புரா பெசாகிஹ் கோவில் (பாலி), ஐவர் மலை,ஆஞ்சநேயர் மலை, கன்னிவாடி மலைகள், பூம்பாறை மற்றும் உஜ்ஜைன் (இந்தியா). ஸ்ரீ ரெஜித் குமார் அவர்களின் கூற்றுப்படி, அவரின் எதிர்கால கடமைகளை செய்வதற்கு வசதியாக குறிப்பிட்ட ஆற்றல்களான பஞ்சபூத ஆற்றல், சப்தரிஷி மண்டலம் அல்லது (பிக் டிப்பர்) ஆற்றல், பிளீயட்ஸ் அல்லது (கார்த்திகை) விண்மீன் நட்சத்திர ஆற்றல், ஸ்வஸ்திகா ஆற்றல் மற்றும் அன்னை தாவோ ஆற்றல் ஆகியவற்றை பல்வேறு ஆற்றல் புள்ளிகளிடமிருந்து பெற தெய்வீகமாக வழிகாட்டப்பட்டார்.



சிங்கப்பூரின் மேக் ரிச்சி நீர்த்தேக்கத்தில் ஸ்ரீ ரெஜித் குமார்



சிங்கப்பூரில் மேக் ரிச்சி நீர்த்தேக்கத்தில் LMR உறுப்பினர்களுடன் ஸ்ரீ ரெஜித் குமார்

ஸ்ரீ ரெஜித் குமார் தனது ஆற்றல் புள்ளிகளுக்கான பயணத்தின் பொழுது தனக்கு கிடைத்த சில சுவாரசியமான வெளிப்பாடுகளை பகிர்ந்து கொண்டார். அவை பின்வருமாறு

* மெக் ரிச்சி நீர்த்தேக்கம் (சிங்கப்பூர்) – இது குமரிக்கண்டம் காலத்தில் இருந்த ஒரு புனிதமான ஆற்றல் புள்ளி என்றும் அது சிவபெருமானின் ஆற்றலைக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறுகிறார். அதாவது தெய்வீக ஆண்பால் அல்லது 'யாங்' ஆற்றல் பிரபஞ்சத்தின் உருவமற்ற சக்தியாக இங்கு குறிப்பிடப்படுகிறது – பஞ்சபூத ஆற்றல்கள் அதாவது ஐந்து காரணிகளின் சக்திமிக்க ஆற்றல்கள் – காற்று, நீர், நெருப்பு, நிலம், மற்றும் ஆகாயம் ஆகியவற்றின் சக்தி இங்கே உள்ளது. தெய்வீக பெண்பால் ஆற்றல் அல்லது 'யின்' ஆற்றல் இங்கே தெய்வீக அன்னை தாவோ என அவரது வெளிப்படையான உருவத்தில் உள்ளது. இரண்டு சக்திமிக்க ஆற்றல்கள் மெக் ரிச்சி நீர்த்தேக்கத்தில் இணைகின்றன மற்றும் ஸ்வஸ்திக் ஆற்றல்களை அவற்றின் மையப்புள்ளியில் காணலாம். ஸ்வஸ்திக் ஆற்றல் குமரிக்கண்ட முன்னோர்களால் நேரப் பயணத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டது என்று அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. இப்புனிதத் தலத்தின் பாதுகாவலர் நந்திகேசுவரர் ஆவார் மற்றும் ஒருவர் அவரிடம் பிரார்த்தனை செய்து பின்னர் சென்று தியானத்தால் போதுமான ஆசீர்வாதங்களைப் பெறலாம். அது உலகியல் மற்றும் ஆன்மீக வழிகளில் அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும்.

* U.Kவில் உள்ள சில்பரி மவுண்டன்ஸில் ஒரு முருக இயந்திரம் உள்ளது. இது அகத்திய முனிவரால் இங்கே பிரதிஷ்டை செய்யப்பட்டது.


* U.Kவில் உள்ள டிராகன் ஹில் வேறு உலகங்களுக்கான நுழைவுவாயில் என்று அறியப்படுகிறது.

* ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் – இல் உள்ள லயன் ஐலண்ட் குமரிக்கண்டம் மற்றும் செவ்வாய் கிரகம் தொடர்புடைய தகவல்களைக் கொண்டுள்ளது.

* கதிர்காமம் (இலங்கை) உள்ள மணல் பூமியிலிருந்து அல்ல விண்வெளியில் இருந்து வந்தது.

* கார்த்திகை அல்லது பிளேடியன் நட்சத்திர ஆற்றல்கள் குறிப்பாக ஆஸ்திரேலியாவில் ப்ளூ மவுண்டன்ஸில் உள்ளது

* இந்தியாவில் பழனி மலைக்கு அருகில் உள்ள ஆஞ்சநேயர் மலை ஏராளமான கார்த்திகை அல்லது பிளேடியன் ஆற்றல்களைக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.



இங்கிலாந்தில் உள்ள சில்பரி ஹில்சில் ஸ்ரீ ரெஜித் குமார்

ஸ்ரீ ரெஜித் குமார், பிளேடியன் அல்லது கார்த்திகை ஆற்றல்கள் 2013 ஆம் ஆண்டு முதல் பூமியில் ஏராளமான அளவில் பாய்கின்றன என்றும் இது பூமியில் ஆற்றல் சக்தியை உயர் நிலைக்கு மாற்றுவதற்கான ஒரு ஆயத்தம் என்றும் கூறுகிறார். மேலும் பூமிக்கு ஒரு சுஷ்ம அல்லது ஆற்றல் உடல் இருக்கிறது. அதனால் அதற்குரிய மாற்றங்கள் செய்த பிறகு தான், நேர்மறை மாற்றங்களைக் காணக் கூடும். இந்த காரணத்திற்காகவே அவர் குறிப்பிட்ட ஆற்றல் புள்ளிகளுக்குச் செல்லும்படி வழிகாட்டப்பட்டதாக ஸ்ரீ ரெஜித் குமார் கூறுகிறார்.

அவரின் ஆன்மீக பயணம், இந்தியாவில் உள்ள புனித இடமான பழனியுடன் நெருங்கிய தொடர்புடையது என்று பகிர்ந்து கொள்வதன் மூலம் நிறைவு செய்வதுடன் ஆற்றல் புள்ளிகளுக்கான பயணத்தில் அவற்றின் ஆன்மீக முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி, அவரை வழிநடத்தியது முருகப் பெருமான் என்பதை வெளிப்படுத்துகிறார்.

2017 ஆம் ஆண்டில் முருகப்பெருமான் எதிர்கால கடமைகளை நிறைவேற்றுவதற்கான உலகளாவிய தளமாக செயல்படும் 'லயன் மயூரா ராயல் கிங்டம்' LMRK என்ற ஆன்மீக அமைப்பினை தொடங்க அவருக்கு வழிகாட்டினார். முருகப்பெருமான் ஸ்ரீ ரெஜித் குமாருக்கு வெளிப்படுத்தியது என்னவென்



மங்கோலியாவின் ஷெயின்ஷான்டில் செங்கிஸ்கானின் கலை அருங்காட்சியகத்திற்கு முன்பாக ஸ்ரீ ரெஜித் குமார்

றால் அவரது தெய்வீக வழிகாட்டுதலின் கீழ் கார்த்திகை அல்லது பிளியடியன் ஆற்றல்களைச் சுமக்கும் ஆத்மாக்கள் இவ் அமைப்பிற்கு தானாகவே ஈர்க்கப்பட்டு உலகில் நேர்மறையான மாற்றங்களைச் செய்ய உதவும் பணிக்கு வருவார்கள். இவ்வாறு 15 நாடுகளைச் சேர்ந்த 1,500உறுப்பினர்கள் தானாக முன்வந்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. LMRK அமைப்பு பற்றி மேலும் அறிய, நீங்கள் அவர்களின் வலைத்தளமான www.lionmayura.org – ஐப் பார்வையிடலாம்.

**எழுதியவர் – திருமதி. சௌம்யா நிகில்**
**மொழிபெயர்ப்பாளர் – திருமதி. பிரீத்தி.ஜெ**

# தடுப்பூசி போடாத அரச ஊழியர்களுக்கு தொற்று வந்தால் சலுகைகள் இல்லையாம்

## அரசு அதிரடி

கொழும்பு, ஜூலை 25

இலங்கையில் கொவிட் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத அரசாங்க ஊழியர்களுக்கு தொற்று ஏற்பட்டால் அவர்களுக்குரிய அனுகூலங்களை வழங்காமல் இருக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அவ்வாறு தொற்றுக்குள்ளாகும் அரசாங்க ஊழியருக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறைக்கு அனுமதி வழங்காமல் இருப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்பூசி பெறாத அரச ஊழியர் ஒருவர் ஏதாவது முறையில் தொற்றுக்குள்ளாகினால் அவர்களை தனிமைப்படுத்தும் போது தனிப்பட்ட விடுமுறையில் குறைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி பெற்றுக் கொண்ட நபர்களின் பாதுகாப்பை தடுப்பூசி பெறாத நபர்களால் இல்லாமல் செய்வதற்கு உரிமை இல்லை என அவர் கூறியுள்ளார். மேலும் தடுப்பூசி பெறாத நபர்கள் தொடர்பில் சில தீர்மானங்கள் எடுப்பதற்கு எதிர்வரும் நாள்களில் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எப்படியிருப்பினும் கொவிட் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாத நபர்களுக்கு பலவந்தமாகத் தடுப்பூசி செலுத்துவதற்கு எவருக்கும் உரிமையில்லை என பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 076 740 3814

INDIVIDUAL ENGLISG CLASSES
K. GANESH (BA. Pera)
Grade 7 தொடக்கம் International Schools, பட்டதாரிகள் பட்டதாரி மாணவர்கள் (English Medium உட்பட) தொழில்புரிவோர் , O/L A/L எடுத்தவர்கள் சரளமாக பேசுதற்கு

077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

சேவை
நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடைவு வைத்த நிறுவனத்துக்கு வருகை தந்து மீட்டெடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை.
AAA GOLD CENTRE
076 568 4346

ST. ANTONY'S COMPUTER

99,000/= முதல்
021 222 4865
075 069 8608
189, K.K.S Road, Jaffna Town.

HIKVISION Mega Store
No.1 WorldWide CCTV and Video Surveillance
ஹிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
Main Show Room in Northern Province
உங்கள் வீடுகள்,அலுவலகங்கள், வங்கிகள்,கோயில்கள் மற்றும் பொது பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தி தரப்படும்

நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் மற்றும் உதிரிபாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்
Hot Line - 021 222 7126
hik visionmegastore@gmail.com
இல-164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
164, Palaly Road, Thirunelvely, Jaffna
077 473 6057
077 287 1841
077 899 2923

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
070 330 5500
075 330 5500
077 888 9388
லண்டன் 1000/= (1 kg க்கு மேல்)
பிரான்ஸ்,ஜேர்மனி,பெல்ஜியம், டென்மார்க்,நெதர்லாந்
11 Kg க்கு 13,000/=
மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 1100/=

1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | மல்லாவி |
| சங்கானை | பளை | மன்னார் |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | வவுனியா |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | திருகோணமலை |
| நெல்லியடி | முல்லைத்தீவு | மட்டக்களப்பு |
| கைதடி | கனகராயன் குளம் | கொழும்பு |

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2021 இல் வெளியிடப்பெற்றது.